Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field.

உள்நாட்டு, வெளிநாட்டு விமான ரிக்கெட்டுக்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல.32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 14 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 27 (31.10.2005) திங்கட்கிழமை இதழ்:31

# புலனாய்வு அதிகாரி கேணல் மீடின் கிரிபத்கொடவில் சுட்டுக்கொலை!





கொழும்பு

இராணுவ புலனாய்வுத் துறையின் சிரேஷ்ட அதிகாரியும் - கொழும்பு புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரியுமான லெப்.கேணல் துவான் றிஸ்வி மீடின் (வயது 39) நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டார். மரணத்தின் பின்னர் இவருக்கு கேணலாக பதவியுயர்வு வழங்கப்பட்டிருப்பதாக இராணுவத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

நேற்றுமுன்தினம் இரவு கொழும்புக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் ரிஸ்வி மீடின் கொலைக்கு பாதாள உலகக்குழுவே காரணம்!

### பொலிஸ் விசாரணைகளில் தகவல்

கொழும்பு

இராணுவப் புலனாய்வுத்துறை தலைமையக பிரதம அதிகாரியான கேணல் ரிஸ்வி மீடினை அவருடன் வாகனத்தில் பயணித்த சிங்களவரான சமில என்பவரே சுட்டுக்கொன்றதாகவும் கொலையாளியான இவருக்கும், பாதாள உலகக் குழுவினருக்கும் தொடர்புகள் இருப்பதாகவும் பொலிஸ் விசாரணையாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கிரிபத்கொடவில் உள்ள ரிஸ்விமீடினின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சனிக்கிழமை இரவு ரிஸ்வியும் அவருடன் நெருக்கமாக இருந்துவந்த சமிலவும் மது அருந்தியுள்ளனர். மதுபோதையில் இருந்த அவர்கள் இருவரும் ரிஸ்வியின் 19-5823 இலக்கமுடைய உத்தியோகபூர்வ வாகனத்தில் புறப்பட்டுச் சென்றனர்.

பின்னர் இருவரும் அதே வாகனத்தில் திரும்பிக்கொண்டிருந்தனர். ரிஸ்வி மீடினின் உத்தியோகபூர்வ இல்லமருகே இரவு 10.30 மணியளவில் அவரது வாகனம் வந்தபோது ரிஸ்வி அருகில் அமர்ந்திருந்த சமிலவே ரிஸ்வியின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வு அதிகாரியின் கொலைக்கு வீரவன்ச, சோமவன்சவே பொறுப்பு!

### எதிர்கட்சித் தலைவர் ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு

இராணுவ புலனாய்வு அதிகாரி கேணல் ரிஸ்வி மீடினின் படுகொலையை ஐ.தே.க வன்மையாகக் கண்டிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அகுரஸ்ஸயில் நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் -

லெப்.கேணல் முத்தலிப் மற்றும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சமயம் அது தொடர்பாக விசாரணைகளை நடத்த விசேட குழுவொன்றை நியமிக்குமாறு நான் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கினேன்.

நான் கூறியதற்கு இணங்க அன்று அக்குழு நியமிக்கப்பட்டிருந்தால் இன்று கேணல் ரிஸ்வி மீடின் உயிரோடு இருந்திருப்பார். எவ்வாறிருப்பினும் அவரின் படுகொலையை ஐ.தே.க வன்மையாகக் கண்டிக்கிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் புலிகளின் காவலரண் மீது ராணுவத்தினர்- கருணா குழு தாக்குதல்!

### போராளி வீரச்சாவு – பதில் தாக்குதலில் ஒருவர் பலி!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரைப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் எல்லைப்புறக் காவலரண்கள் மீது இராணுவ புலனாய்வுத் துறையினரும் அவர்களின் துணையுடன் இயங்கும் ஆயுதக்குழுவினரும் இணைந்து நடத்திய தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதலில் இராணுவ புலனாய்வுத்துறையினருடன் சேர்ந்தியங்கும் கருணா குழு உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு - பொலனறுவ மாவட்ட எல்லைப் பகுதியிலுள்ள முதுரங்குளம் - குஞ்சுக்குள முன்னணிக் காவலரண் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 4.30 மணியளவிலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

இராணுவ புலனாய்வுத்துறையினருடன் உதவியுடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவிய கருணா குழுவினர் - (12 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் நேற்று

## கோண்டாவில், சாவகச்சேரியில்

## குண்டுத் தாக்குதலில்

## குடாநாட்டில் நேற்று பூரண துக்கதினம்!

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டில் நேற்று உணர்வுபூர்வமாக துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த வெள்ளியன்று புத்தூர் பகுதியில் இராணுவத்தினரால் இளைஞன் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டது மற்றும் பொதுமக்கள் பலர் காயப்படுத்தப்பட்ட சம்பவங்களைக் கண்டிக்கும் வகையில் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் நேற்று துக்கதினம் அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுத்தது.

இதற்கமைய நேற்று யாழ்.குடாநாட்டில் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. வீதிகள், கடைகள், (12 ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவில், சாவகச்சேரியில் நேற்றிரவு கிரனேட் தாக்குதல்!

யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டில் படையினர் மற்றும் பொலிஸார் மீது நேற்றிரவு இரண்டு இடங்களில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு பொலிஸார் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் பியதாஸ(வயது52), பண்டார (வயது 36) ஆகிய இரண்டு பொலிஸாரே காயமடைந்து வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

கோண்டாவில் பகுதியிலுள்ள தபாலகத்தில் வாக்காளர் அட்டைகளுக்கு பாதுகாப்புக்காக நின்ற பொலிஸார் மீதே மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தினர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இரண்டு பொலிஸாரில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சாவகச்சேரி பகுதியில் நேற்றிரவு 7 மணியவில் உழவு இயந்திரத்தில் சென்ற படையினர் மீது கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் படையினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை .

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுத் தாக்குதலில் கணவன், மனைவி பலி!

பொலனறுவ

பொலனறுவை - கதுறுவெல பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பெற்றோல் குண்டுத்தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர்.

நேற்று அதிகாலை மேற்படி வீட்டு வளவினுள் பிரவேசித்த நபர்கள் சிலர் ஜன்னல் ஊடாக பெற்றோல் குண்டு தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த கணவனும் மனைவியும் அவர்களது குழந்தையையும் பொலனறுவ வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதும் கணவன் மனைவி இருவரும் சிகிச்சை பலனளிக்காத (12 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவத்துடன் இயங்கும் ஆயுதக்குழுக்களை வட- கிழக்கிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்!

## கண்காணிப்புக்குழுவின் பரிந்துரையை ஜனாதிபதி ஆணைக்குழுவும் ஏற்றது!

கொழும்பு

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் - இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களை அனுமதிக்கக்கூடாது என்றும் இவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு செய்த பரிந்துரையை ஜனாதிபதி ஆணைக்குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி ஆணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குழுவின் விசாரணை அறிக்கைகள் கடந்த ஒக்ரோபர் 20 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டன. அதில் ஆயுதக்குழுக்களை களைவது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் ஸ்டீன் ஜோர்ஜன்சென் தெரிவித்திருந்த கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இருப்பினும் இந்தக் குழு எதுவித குறிப்பிடத்தக்க பரிந்துரைகளையும் ஜனாதிபதிக்கு அளிக்கவில்லை.

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவினரால் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்ட நிலையில் இராணுவத்தை இயக்குகின்ற ஜனாதிபதி அமைத்துள்ள ஆணைக்குழுவிடம் நீதியான விசாரணைகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

# காச நோய்த்தடுப்பு நடவடிக்கை கலந்துரையாடலில் முக்கிய முடிவு

யாழ்ப்பாணம்

இலங்கை காச நோய் தடுப்புச் சங்கத்தின் யாழ்ப்பாண கிளையின் கலந்துரையாடல் கடந்த புதன் கிழமை காலை 11 மணிக்கு யாழ்.காசநோய் வைத்திய அதிகாரி டொக்டர் சி.ஜமுனானந்தா தலைமையில் பண்ணையில் அமைந்துள்ள காச நோய் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் எதிர் கால காச நோய்த் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் காச நோய் பரவுவதை 2010 ஆம் ஆண்டு முற்றாக கட்டுப்படுத்துவதற்கும், 2020 ஆம் ஆண்டு காசநோயை முற்றாக யாழ். குடாநாட்டில் இல்லாமல் ஒழிக்கவும் நடவடிக்கை எடுத்தல் மற்றும் இதற்கான முழுமையான அணுகுமுறைகளை சமுதாயத்தில் மேற்கொள்ளுதல் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

காசநோயாளருக்கு ஏற்படுகின்ற சமூக உளவியல் பிரச்சினைகள் இனங் காணப்பட்டு அவற்றை நீக்குவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து நிறைவேற்றுதல் மற்றும் இவர்களுக்கு வேண்டிய சேவையை ஆற்றத் தேவையான நிதி சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், இதற்கென விசேட கொடி வாரம் ஒன்றை மார்ச் 24 ஆம் திகதியை மையமாக வைத்து நடத்துதல் குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது.

காச நோய் பற்றிய விழிப் புணர்வை சமுதாய மட்டத்தில் ஏற்படுத்தவும், சமூகத்தவரை காச நோய் தடுப்பின் பங்காளிகள் ஆக்கும் நடவடிக்கைகளை எடுக்கவும் இதற்கென நாடகங்கள், போட்டிப் பரீட்சைகள், போன்றவற்றை மாணவர்கள் மட்டத்தில் நடத்துவதெனவும், மேலும் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வகையிலான பிரசுரங்களை வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன்,

விடுதியில் சிகிச்சை பெறும் காச நோயாளருக்கு வைத்தியசாலையில் கிடைக்காத மருந்துகளை வழங்கவும், ஆய்வு கூட பரிசோதனைகளுக்கு உதவவும் முடிவு செய்யப்பட்டது.

காச நோய்த் தடுப்பில் ஈடுபட உத்தியோகத்தர் ஒருவரை சங்கத்தின் செலவில் வேலைக்கு அமர்த்துதல், காச நோயாளிகளின் குடும்பத்துக்கு வருமானம் ஈட்டும் வழிகளும், மற்றும் பொருள் உதவிகள் வழங்கப்பட்டு புனர்வாழ்வு அளித்தல்.

காச நோயுடன் எயிட்ஸ் தொடர்புடையதால் (எயிட்ஸ்) நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல், காசநோய் தடுப்புச் சங்கத்தின் முன்பு இருந்த கட்டடம் அழிந்து போனமையால் தற்போதைய அவசர தேவை கருதி மீளமைக்க நடவடிக்கை எடுத்தல் போன்ற முக்கியமான முடிவுகள் இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்டதாக யாழ்.காச நோய் வைத்திய சாலை அதிகாரி டொக்டர் சி.ஜமுனானந்தா தெரிவித்தார்.


புத்தம் புதிய DAIDO BRAND NEW C-F.100-9 CRUSSER



0112 341580, 0112 341581

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
தனுஷ், பிரியாமணி
அது ஒரு கனாக்காலம்
இசை: இளையராஜா
கதைவசனம்: பாலுமகேந்திரா
காட்சிகள்;-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)


சுன்னாகம் நாகம்ஸ்
மூன்றாவது ஜனத்திரள் வாரமாக மழை
ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல், கலாபவன்மணி நடித்த
அடுத்த வெளியீடு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினத்தில்
ஸ்ரீகாந், நமீதா,வடிவேல் நடித்த
பம்பரகண்ணாலே
காட்சிகள்:-11.00,3.00,7.00 (பழைய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய் சிம்ரன் மணிவண்ணன் நடித்த
துள்ளாத மனமும் துள்ளும்
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும்
இலங்கையிலும்ஒரேதினவெளியீடு
விக்ரம், அசின்
மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
மஜா
காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக
DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன்
இளைய தளபதி
விஜய் வெடிக்கும்
சிவகாசி
விசேட காட்சி
காலை 8.30 மணிக்கு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30


# முதலாம் வருட நினைவு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 | 31 |
| 01 | 10 |
| 1928 | 2004 |

## அமரர்.திரு.மரியாம்பிள்ளை ஆரோக்கியநாதன்

(பொலிற்)

பாசமுடன் எமை வளர்த்துப் பார்புகழ வைத்தவரே
நேசமுடன் ஊர் உயர உறங்காது உழைத்தவரே
வாசமுள்ள மலரது போல் மணம் பரப்பி நின்ற வேளை - எமை
வாடவைத்து வானுலகம் சென்று -இன்று
ஆண்டொன்று ஆனதுவே.
கலையாத நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுகளோடு வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி.4770)


வாசிப்பு மாதம்
"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"
வாசிப்போம் வாசித்ததை யோசிப்போம்
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
தொடர்புகளுக்கு:
No.03 Torrington Avenue,
Colombo - 7.
காசோலை எனின் அகவிழி என்ற பெயருக்கும், காசுக் கட்டளை எனில் கவலொக்ரவுனில் (Havelock) மாற்றக கூடியதாக அனுப்பவும்.
T.P. 011- 2506272, E-Mail:ahavili@viluthu.org
(C/4683)


# யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் புதிய நிர்வாக சபை

யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் நடப்பு ஆண்டுக்குரிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இடம் பெற்றது. இந்தக் கூட்டத்தில் -

தலைவர் - க.சிவானந்தமூர்த்தி, உபதலைவர் - இ.இரத்தினம், செயலாளர் பொ.ஆழ்வாப்பிள்ளை, உபசெயலாளர் நாச்சியார் செல்வநாயகம், பொருளாளர் தி.வேல்நம்பி ஆகியோரும், நிர்வாக சபை உறுப்பினர்களாக க.க.அருள்வேல், கலாநிதி செ.இளங்குமரன், ஆ.சத்தியசீலன், செல்வி.வி. நாகேஸ், கலாநிதி கே.ரகுநாதன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

காலம் கடந்த பிறப்பு இறப்புக்களை

# உரியவர்களுடனும், உரிய ஆவணங்களுடனும் வந்து பதிவுசெய்யுமாறு அறிவிப்பு!

யாழ்ப்பாணம்

காலங்கடந்த பிறப்பு, இறப்புக்களை பதிவு செய்யும் வகையில் உதவி பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்டுவரும் விசேட சேவையில் பதிவு செய்ய வருவோர் உரியவர்களுடன், உரிய ஆவணங்களையும் கொண்டு வருதல் அவசியமானது என உதவி பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

காலங்கடந்த பிறப்பு இறப்புக்களை பதிவு செய்யும் முகமாக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த விசேட சேவையானது பிரதி செவ்வாய் தோறும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை உதவிப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் உள்ள விசேட கருமபீடத்தில் இடம்பெற்று வருகிறது. கணிசமானோர் இதில் தமது காலங் கடந்த பிறப்பு, இறப்புக்களை பதிவு செய்து வருகின்றனர்.

பெரும்பாலோனோர் பிறப்பு, இறப்பு பதிவு தொடர்பான உரிய ஆவணங்கள் இன்றியும், உரியவர்கள் சமுகமளிக்காததாலும் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளனர். குறிப்பாக பிறப்பு பதிவு தொடர்பாக தந்தை, தாய், பிள்ளை மூவரும் சமுகமளித்தல் அவசியமானது.

எனவே காலங்கடந்த பிறப்பு, இறப்புக்களை பதிவு செய்ய வருவோர் உரியவர்களுடன் உரிய ஆவணங்களையும் எடுத்துவர வேண்டுமென உதவி பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# கதை சொல்லல் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விபரம்!

தென்மராட்சி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சரசாலை பொது நூலகத்தால் நடத்தப்பட்ட - பாடசாலை மாணவர்களிடையிலான கதை சொல்லல் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**பிரிவு - 1**

1 ஆம் இடம் சி.நிஷாயினி (மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்), 2 ஆம் இடம் செ.துஷானி (மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்), 3 ஆம் இடம் க.சாதனா (சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்), சி.பானுஜா (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்)

**பிரிவு 2**

1 ஆம் இடம் ஸ்ரீ.ஆதித்தியன் (மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), 2 ஆம் இடம் ச.தயாபரன் (மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்), 3 ஆம் இடம் ப.சங்கவி (மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்)

**பிரிவு 3**

1 ஆம் இடம் ந.கீர்த்திகா (சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்), 2 ஆம் இடம் சி.பிறிசில்லா (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), 3 ஆம் இடம் மோ.தனுஷ்றாஜ் (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), ச.மதுசனா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்) ஆகியோரே வெற்றியீட்டியவர்கள் ஆவர்.

# கார்- மோட்டார் சைக்கிள் விபத்து; தென்மராட்சியில் இளைஞர் காயம்!

சாவகச்சேரி

சாவகச்சேரி- கச்சாய் வீதியில் நேற்று நண்பகல் இடம் பெற்ற கார்- மோட்டார்சைக்கிள் விபத்தில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த தேவதாஸ் அன்ரன் சசிகரன் (வயது 29), இராசகுலம் ஜெராட்ராஜா (வயது 29) ஆகியோரே படுகாயமடைந்து சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற போக்குவரத்துப்பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

# அதிபர் சேவை ஆட்சேர்ப்பு சேவைக் காலம் நீடிப்பு!

யாழ்ப்பாணம்

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3, வகுப்பு 2-ii ஆகிய பணிநிலைகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையை இவ்வருட இறுதியில் நடத்துவதற்காக கல்வி அமைச்சினால் கடந்த செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த வர்த்த மானி விளம்பரத்தில் இருபணி நிலைக்குமான விண்ணப்பதாரிகளது தகைமைகளில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பான அண்மித்த ஐந்தாண்டுகால சேவைக்காலம் இருக்க வேண்டும் என்பதும் ஒரு நிபந்தனையாகக் கேட்கப்பட்டிருந்தது. இந்த நிபந்தனைக்கான சேவைக் காலத்தை 31-10-2005 வரையிலான காலப் பகுதிக்குள் என திருத்தியமைத்துள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதே போன்று விண்ணப்ப முடிவுத் திகதியையும் இதுவரை நீடித்திருப்பதாகவும் அவர்மேலும் தெரிவித்தார். (31)

கடும் வாடைக் காற்றினால்

# நெடுந்தீவு வடக்கு கரையோர பிரதேச மக்கள் பெரும் சிரமம்

நெடுந்தீவு

நெடுந்தீவு வடகடற்கரையோரங்களில் வதியும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தற்போது வீசும் கடுமையான வாடைக் காற்று காரணமாக பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், அடுத்துவரும் நாட்களில் இடம் பெயர வேண்டியநிலை ஏற்படலாம் எனவும் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இதேவேளை, கடற்கரையில் மக்கள் செறிந்து வாழும் தாழைத்துறை, குருநகர் பகுதிகளின்பல இடங்களில் மக்கள் குடியிருப்புகள் வரை கடல் வந்துள்ளதுடன், கரையோரப் பாதைகள் இன்றி மக்கள் சிரமமடைகின்றனர்.

கரையோரத் தடுப்பணைகள் எதுவும் அமைக்கப்படாமையால் வாடைக்காற்றுக்காலங்களில் தொடர்ந்து இவ்வாறான அவலநிலை ஏற்படுவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்தப்பகுதி மக்கள் எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# துயர் பகிர்கின்றோம்



எமது சக மாணவி பாலரூபினி அவர்களின் அன்புப் பேர்த்தியார்

**திருமதி பரமேஸ்வரி நமசிவாயம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

H.N.D.A 3ம் வருட மாணவர்கள் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனம்

(2104)

# புலமைப் பரீட்சையில் 14 மாணவர்கள் சித்தி

வடமராட்சி

அண்மையில் வெளியிடப்பட்ட 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் படி கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளில் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில்அதிகளவு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இந்தப் பாடசாலையிலிருந்து 14 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். க.ஆர்த்திகா (156 புள்ளி), க.ஜசிதா (156 புள்ளி), த.கோகுலன் (153 புள்ளி), பு.வைகுந்தன் (148புள்ளி), து.மாலோகன் (147புள்ளி), சி.நிரோஷன் (146 புள்ளி), க.நிவேதன் (144 புள்ளி), சு.விநோதன் (142 புள்ளி), த.பிரவின் (138 புள்ளி), சி.சதீஸ்கரன் (138 புள்ளி), கு.வைதேகி (138 புள்ளி), த.மதுஷன் (132 புள்ளி), சி.விதுர்ஷன் (129 புள்ளி), கை.பிரணவன் (126 புள்ளி) (13)

# யுத்தநிறுத்த ஒப்பந்தத்தால் இராணுவத்தினரின் மனைவியர் சித்திரவதைகளிலிருந்து விடுதலை!

கொழும்பு—

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தால் இராணுவத்தினர் தமது மனைவியரை சித்திரவதை செய்வது தொடர்பான முறைப்பாடுகள் குறைந்துள்ளதாகப் பெண்களுக்கான அமைப்பு ஒன்று சுட்டிக் காட்டியுள்ளது.

இது தொடர்பாக வின் என்ற பெண்கள் அமைப்பின் நிர்வாக இயக்குநர் சாவித்ரி விஜசேகர கருத்துத் தெரிவிக்கையில் -

யுத்தநிறுத்த ஒப்பந்தம் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரியில் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து தங்களது மனைவியரை இராணுவத்தினர் சித்திரவதை செய்வது தொடர்பான முறைப்பாடுகள் கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளன.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இல்லாத காலத்தில் நாள்தோறும் 20 இராணுவத்தினரின் மனைவியர் தங்களது அமைப்பிடம் கணவரின் சித்திரவதை குறித்து முறைபாடு செய்து வந்தனர்.

வடக்கு - கிழக்கில் போர்ச் சூழலிருந்து விடுபட்டு விடுமுறைக்கு வீடு திரும்பும் இராணுவத்தினர், தமது மனைவியை அடித்து உதைத்து சித்திரவதை செய்து வந்தனர். இராணுவத்தினரது குடும்ப விவகாரங்களினால் இந்தச் சித்திரவதைகள் நிகழவில்லை. போர்ச்சுழல் அழுத்தங்களால் இந்தச் சித்திரவதைகளை அவர்கள் மேற்கொண்டனர். மனைவியருடனான உடலுறவு கொள்ளும் போது கூட வன்புணர்வையே இந்த இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர். மனைவியரை காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகள் மூலம் துன்புறுத்தினர்.

அனுராதபுரம் மற்றும் மாத்தறை பிரதேசங்களிலிருந்துதான் இது தொடர்பிலான அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது முதல் இந்த முறைப்பாடுகள் குறையத் தொடங்கியுள்ளன என அவர் மேலும் கூறினார்.

# ஹெல உறுமயவுக்குள் மீண்டும் முரண்பாடுகள்!

கொழும்பு—

ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள் மீண்டும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனடிப்படையில் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகப்போவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய, ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்து வருகிறது. இந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷவின் பிரசாரக் கூட்டங்களில் தாம் பங்கேற்க வேண்டும் என எல்லாவெல மேதானந்த தேரர் வெளியிட்ட கருத்தை, கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான அத்துரலியே ரத்னதேரர் ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனையடுத்து, எல்லாவெல மேதானந்ததேரர் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகப்போவதாகத் தெரிவிக்கப் பட்டது.

எனினும், இந்தத் தகவல் தொடர்பில் எல்லாவெல மேதானந்ததேரர் தமது மறுப்பை வெளியிட்டுள்ளார்.

தமது அரசியல் எதிரிகளால் பரப்பப்பட்ட பொய்யான தகவல் இது என அவர் குறிப்பிட்டார். தாம் பதவி விலகுவதற்கு ஆலோசிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# மகிந்தவின் சிந்தனைகளில் ஜே.வி.பியே ஆக்கிரமித்துள்ளது

## பட்டி வீரக்கோன் குற்றச்சாட்டு

கொழும்பு—

மகிந்த ராஜபக்ஷவின் சிந்தனைகளில் ஜே.வி.பியின் கொள்கைகளே ஆக்கிரமித்துள்ளதாக லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

மகிந்தவின் சிந்தனை விடுதலைப்புலிகளின் நோக்கைப் பூர்த்தி செய்யாதவரை அதனால் எந்தவித பயனும் எற்படமாட்டாது. இந்த நிலையில் ஹெல உறுமய, மகிந்தவின் சிந்தனை விடயத்தில் அழுத்தம் கொடுக்கும் கட்சியாகச் செயற்படவில்லை.

1994 ஆம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணி முன்வைத்த கொள்கைகளுக்கு மாறுபட்ட விதத்தில் மகிந்தவின் கொள்கைகள் அமைந்துள்ளன..

1994 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வைத்த கொள்கைகளின் மூலம் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடிந்தது. எனினும், தற்போது மகிந்தவின் சிந்தனை காரணமாகத் தமிழ் மக்களையும் விடுதலைப்புலிகளையும் வெல்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்றும் பட்டி வீரக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரூபவாஹினி வெளியிட்ட செய்திக்கு கண்காணிப்புக் குழு கடும் விசனம்!

கொழும்பு—

கொழும்பில் சிகிச்சைபெற்று வந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி உயிரிழந்ததாக அரச தொலைக்காட்சியான ரூபவாகினி செய்தி வெளியிட்டதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கடும் விசனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

வவுணதீவுப் பகுதியில் அண்மையில் புலிகளின் வாகனத் தொடரணி மீதான தாக்குதல் முயற்சியை முறியடித்தபோது போராளி ஒருவர் படுகாயமடைந்தார்.

பின்னர் அவர் கொழும்பில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்த நிலையில் கடந்த ஒக்ரோபர் 13 ஆம் திகதி அந்தப் போராளி உயிரிழந்தார் என்று ரூபவாகினி செய்தி வெளியிட்டது. ஆனால் அவர் உயிருடன்தான் உள்ளார் என்றும், அரச தொலைக்காட்சி இத்தகைய செய்தியை ஏன் வெளியிட்டது என்பது குறித்தும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிருப்தியடைந்துள்ளது.

இது தொடர்பாக சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவுடன் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் விவாதித்தார்.

இதையடுத்து பிரதி ஊடகத்துறை அமைச்சர் டிலான் பெரேராவுக்கு ரூபவாஹினியின் செய்தி குறித்து கடுமையான குற்றச்சாட்டுக்களுடன் ஜயந்த தனபால கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் குற்றச்சாட்டை ரூபவாஹினியின் தலைவர் எம்.எம்.சுஹைர் மறுத்துள்ளார். அப்படியான செய்திகள் எதையும் ஒக்ரோபர் 13 ஆம் திகதி தாம் ஒளிபரப்பவில்லையென்றும், தாக்குதல் குறித்த செய்திகள் மட்டுமே ஒளிபரப்பப்பட்டன என்றும் அவர் கூறினார்.

## தேர்தலில் வாக்களிக்க

# புலிகளின் பகுதியிலிருந்து வருவோரை கணக்கெடுக்க தேர்தல் செயலகம் முடிவு!

கொழும்பு—

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வரும் அனைத்து வாக்காளர்களையும் கணக்கெடுக்க தேர்தல் செயலகம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பிலான பணிகளுக்குக் கிராம அலுவலர்கள், தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பொலிஸாரை ஈடுபடுத்துவதற்கும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தீர்மானித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் இடையில் நேற்று முதன்முதல் தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வடக்கு- கிழக்கில் தேர்தல் மோசடிகள் நடைபெறுவதைத் தவிர்ப்பதற்கும், சுதந்திரமான, நேர்மையான தேர்தலை நடத்துவதற்கும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க இந்தக் கூட்டத்தில் உறுதியளித்தார்.

அனைத்து கொத்தணி வாக்களிப்பு நிலையங்களிலும் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களையும் பவ்ரல் அமைப்பின் கண்காணிப்பாளர்களையும் ஈடுபடுத்துவதற்கான ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையாளர் செய்துள்ளார்.

வாக்களிக்க வருபவர்களின் தொகையை கணக்கிடுவதன் மூலம் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை பற்றி அறிந்துகொள்ள முடியுமென்றும் அதனால், மேலதிக வாக்களிப்புகள் இடம்பெறாதென்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளருடனான சந்திப்பின் போது அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, சிறீபதி சூரியாராச்சி, கே.என்.வெரகொட, சிறிதுங்க ஜயசூரிய, சமல் ஜயனெத்தி உட்பட பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# கட்சிகளைக் கண்காணிக்க புலிகள் உறுப்பினர் கொழும்பில்

## அரச புலனாய்வுத்துறை கூறுகிறது

கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சிகளின் செயற்பாடுகள், முன்னெடுக்கப்படும் முறைகள் மற்றும் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளைக் கண்டறிவதற்கு விடுதலைப்புலிகள் தமது அரசியல் பிரிவைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொழும்புக்கு அனுப்பியுள்ளதாக அரசாங்கப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் கண்காணிப்பில் விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு உறுப்பினர்கள் கொழும்பு வந்து வெள்ளவத்தைப் பகுதியில் செயற்பட்டு வருகின்றனர். இதேவேளை கொழும்புக்கு வந்துள்ள புலிகளின் ஆயுதக் குழுவுக்கு ரகுராம் மற்றும் சுகி என்னும் இரண்டு பொறுப்பாளர்கள் உள்ளதாகவும், இவர்களே நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அரசாங்கப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. (தே)

# பாதாள உலகக் குழுவினரால் கடத்தப்பட்டவர் பொலிஸாரால் மீட்பு!

கொழும்பு—

பாதாள உலக குழுவினரால் கடத்தப்பட்ட நபரை பொலிஸார் மீட்டெடுத்தனர். இந்தச் சம்பவத்தின்போது 9 மில்லிமீற்றர் ரக பிஸ்டல் ஒன்றினை 6 தோட்டாக்களுடன் கைப்பற்றிய பொலிஸார் 5 பாதாள உலக குழுவினரையும் கைது செய்தனர்.

இரத்மலானை பெல்லாந்தோட்டைப் பிரதேசத்திலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பணம் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக இந்த நபரை வெலிக்கடை பிளாசா கட்டடத்திற்கு அருகிலிருந்து பலவந்தமாக கடத்திய இந்த பாதாள உலகக் குழுவினர் அவரை பாணந்துறை பிரதேசத்திற்குக் கொண்டுசென்று கொலைசெய்யத் திட்டமிட்டிருந்தமை தெரியவந்தது.

முன்னாள் பிரபல பாதாள குழுத் தலைவரான தம்மிக்கவின் சகோதரரும் மேலும் நால்வருமே இந்த நபரைக் கடத்தியதாகத் தெரியவந்துள்ளது.

# புலிகளுடன் ஆலோசித்த பின்னர் மாகாண அமைச்சு செயலர் நியமனம்!

## கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு

கொழும்பு—

வடக்கு- கிழக்கு மாகாண விவசாயத்துறை அமைச்சு செயலர் நியமனம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் அரசு ஆலோசனை நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகளுடன் இரண்டு மாதங்களுக்கு முன்பாக வவுனியாவில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ இது தொடர்பாக ஆலோசனை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து கடந்த வியாழக்கிழமை விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சின் செயலராக ஏ.எச்.எம்.மக்ரூவ் (வயது 53) நியமிக்கப்படுவதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

புலிகளின் ஆலோசனைக் கமையவே இந்த நியமனம் அறிவிக்கப்பட்டதாகவும் ஆளுநர் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

17 ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண சபையின் 5 அமைச்சர்களின் செயலர்களில் முஸ்லிம் ஒருவர் செயலராக நியமிக்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.

# தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பன்னிரு உறுப்பினர்களுக்கு பிணை!

கொழும்பு—

கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது கைதான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தினர் 12 பேருக்கு பிணை அளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் அறிக்கையில் இராணுவம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தினர் கடந்த 25 ஆம் திகதி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இதன்போது பொலிஸாரின் கடமையைச் செய்யவிடாது தடுத்த 2 பிக்குகள் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டனர்.


கைது செய்யப்பட்டோர் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியிருப்பதாக பொலிஸார் நேற்றுமுன்தினம் கோட்டை நீதிமன்றில் தெரிவித்தனர்.

அனுமதி பெறாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸார் எச்சரித்ததாகவும், அதனைப் பொருட்படுத்தாது அவர்கள் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்ததால், தாங்கள் குறைந்தபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தியதாக பொலிஸார் நீதிமன்றில் கூறினர்.

ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட 629 சுவரொட்டிகளும், ஓட்டோ ஒன்றும் மற்றும் இரு மோட்டார் வாகனங்களையும் வழக்கின் தடயப்பொருட்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணையை எதிர்வரும்பெப்ரவரி மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி - சந்தேக நபர்களை எச்சரித்து பிணையில் விடுதலை செய்ய அனுமதியளித்தார்.

# குயின்ஸ்லாந்து பயிற்சி ஆட்டத்தில் மேற்கிந்திய அணி 612 ஓட்டங்கள்!



பிறிஸ்பேன்


குயின்ஸ்லாந்து அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இனிங்ஸில் 612 ஓட்டங்களைக் குவித்தது.

சந்தர்போல் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவுக்கு பயணம் செய்து விளையாடி வருகிறது. இவ்விரு அணிகளிடையிலான 3 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரின் முதல் ஆட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இந்தநிலையில் மேற்கிந்தியத் தீவுகள் - குயின்ஸ்லாந்து அணிகளிடையிலான 4 நாள் பயிற்சி ஆட்டம் பிறிஸ்பேனில் நடைபெற்று வருகிறது. இதன் முதல் இனிங்ஸில் குயின்ஸ்லாந்து அணி 323 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக லோஸ் 63 ஓட்டங்களையும், சைமன்ஸ், லவ் ஆகியோர் தலா 55 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பின்னர் முதல் இனிங்ஸில் ஆடிய மேற்கிந்திய அணி அற்புதமாக ஆடி 612 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. அபாரமாக ஆடிய அந்த அணி வீரர் சாமுவேல்ஸ் இரட்டைச் சதமடித்தார். 298 பந்துகளைச் சந்தித்த அவர் 34 பவுண்டரிகள், 8 சிக்ஸர்களுடன் 257 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

மற்றொரு வீரர் சிமித் 115 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து 2ஆவது இனிங்ஸில் ஆடிய குயின்ஸ்லாந்து அணி நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 52 ஓட்டங்களை எடுத்திருந்தது.



சீனாவின் மகேயு நகரில் கிழக்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் சான்ஷோ என்பதும் பழமையான வீர விளையாட்டும் இடம்பெற்றுள்ளது. இதில் உதைத்தல், குத்துதல், மடக்கிப் பிடித்தல் மூன்றும் அடங்கும்.

நேற்றுமுன்தினம் நடந்த 70 கிலோ சான்ஷோ போட்டியில் சீன வீரர் ஹூ ஜியாங்ஜிங் (இடது) மகேயு வீரர் சங் வபோங்கிடம் ஆக்ரோஷமாக மோதுகிறார். இந்தப் போட்டியில் சங் வபோங் வெற்றிபெற்றார்.

# ஆஷஸ் தொடரின் வெற்றி பாகிஸ்தானிலும் உதவும்!

## இங்கிலாந்து வீரர் கைல்ஸ்



ராவல்பிண்டி

ஆஷஸ் வெற்றி பாகிஸ்தான் தொடரைக் கைப்பற்ற பெரிதும் உதவியாக இருக்குமென இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் அஷ்லி கைல்ஸ் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணி தற்போது பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த 2 அணிகளும் 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளன. முதல் டெஸ்ட் எதிர்வரும் 12ஆம் திகதி முல்டான் நகரில் தொடங்கவுள்ளது.

இந்த டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணியில் அஷ்லி கைல்ஸ், அலெக்ஸ் லூடன், ஷான் உடல் என 3 சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் நம்பிக்கைக்குரிய வீரராகத் திகழ்கிறார் கைல்ஸ்.

இந்தத் தொடர் குறித்து ராவல்பிண்டி மைதானத்தில் பயிற்சிக்கு நடுவே கைல்ஸ் அளித்த பேட்டியில் -

இந்தத் தொடர் எதிர்பார்த்ததை விட கடினமாகவே இருக்கும். வீரர்கள் அதிக தன்னம்பிக்கையுடனும், துடிப்புடனும் இருக்கின்றனர். ஆஷஸ் தொடரில் எங்கள் ஆட்டத்தைப் பார்த்தீர்கள் அல்லவா? இந்த வெற்றிகள் கட்டாயம் கைகொடுக்கும்.

அதே நேரத்தில் உலகின் தலைசிறந்த அணியை அதன் சொந்த மண்ணில் சந்திக்கிறோம் என்பதையும் மறந்து விடக்கூடாது.

இங்கிலாந்து அணியில் இளம் வீரர்களின் ஆதிக்கம் அதிகரித்துவிட்டது.

அனுபவ வீரர்களோடு இளம் வீரர்கள் இணையும்போது அணிக்கு வலிமை பிறக்கிறது. ஒவ்வொரு போட்டியின்போதும் கிடைக்கும் அனுபவத்தை நாம் உணர்ந்து செயற்படுவோமெனத் தெரிவித்தார்.

# இங்கிலாந்துக்கு வெற்றியென கூறுவதா? இன்சமாம் மீது இம்ரான் கான் கண்டனம்!



லாகூர்

இங்கிலாந்துக்கு வெற்றி வாய்ப்புள்ளதாகக் கூறிய இன்சமாமைக் கடுமையாகக் கண்டித்துள்ளார் இம்ரான் கான்.

ஆஷஸ் தொடரை வென்ற பின்பு இங்கிலாந்து வலுவான அணியாகக் கருதப்படுகிறது. தற்போது பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்த அணிக்கு வெற்றி வாய்ப்புகள் இருப்பதாக ஒரு பேட்டியில் கூறியிருந்தார் பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் உல்-ஹக். சபைத் தலைவர் ஷகாரியார் கானும் தனது பங்குக்கு இங்கிலாந்து சமவலிமையில் இருப்பதாகக் கருத்துத் தெரிவிக்க, கொதித்துப் போனார் இம்ரான் கான்.

அணியின் தன்னம்பிக்கையைக் குலைக்கும் விதத்தில் பேசக்கூடாது என்று தி டெய்லி டெலிகிராப் பத்திரிகை பேட்டி ஒன்றில் இம்ரான் கான் கூறியிருக்கிறார்.

ஊடகங்கள் அனைத்தும் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்துக்கே அதிக வாய்ப்பு உள்ளதாக கூறுகின்றன. இதைக்கூட ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், கப்டன் இன்சமாம், ஷகாரியார்கான் இருவரும் இங்கிலாந்தை முன்னிறுத்திப் பேசலாமா? அணி வீரர்களின் தன்னம்பிக்கையை இது குறைத்துவிடாதா?

வீரர்களின் மனதில் எதிர்மறையான எண்ணங்களை இது போன்ற பேட்டிகள் ஏற்படுத்திவிடும். நான் கப்டனாக இருந்தபோது எந்த அணியையும் நம்மால் வீழ்த்திக்காட்ட முடியும் என்ற நம்பிக்கையுடனேயே களமிறங்குவேன். எந்தச் சூழ்நிலையிலும் அணியை விட்டுக்கொடுக்கக்கூடாது.

என்னைப் பொறுத்தவரை வேகப்பந்து வீச்சாளர்களே இந்தத் தொடரில் ஜொலிப்பார்கள். அக்தர், சமி, நவீட், உமர் குல் தங்கள் துல்லிய திறம்பட செய்தால் தொடரை எளிதாகக் கைப்பற்றலாம். மக்ரா போல துல்லியமாக பந்து வீசக்கூடியவர் உமர் குல். இவருக்கு வளமான எதிர்காலம் உள்ளது.

கடந்த ஆண்டு இந்திய அணி எங்கள் மண்ணில் தொடரை வென்றதற்கு துடுப்பாட்ட குழறுபடியே காரணம். தற்போது பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வரிசை சிறப்பாக உள்ளது. பந்து வீச்சுத் துறையும் பலமாக உள்ளது. இவ்வாறு தனது பேட்டியில் தெரிவித்துள்ளார் இம்ரான் கான்.

# இந்திய - இலங்கை அணிகள் ஜெய்ப்பூரில் இன்று மோதல்!

ஜெய்ப்பூர்

இந்திய - இலங்கை கிரிக்கெட் அணிகளிடையே 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஜெய்ப்பூர் சவாய் மான்சிங் அரங்கில் இன்று நடைபெறவிருக்கிறது. இதையொட்டி அந்த அரங்குக்கு கடுமையான பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது.

ரசிகர்கள் அரங்கிலேயே சினிமா படம் பார்ப்பதுபோல போட்டியைப் பார்ப்பதற்காக ஆங்காங்கே ராட்சத திரைகள் பொருத்தப்பட்ட ஸ்டான்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அந்த ராட்சத திரைகளில் போட்டி நேரடி ஒளிபரப்பாக பெரிய அளவில் தெரியும்.

ஜெய்ப்பூர் சவாய் மான்சிங் அரங்கில் ஏற்கனவே விளையாடியுள்ள 6 ஒருநாள் போட்டிகளில் இந்தியா 3இல் வெற்றியும், 3இல் தோல்வியும் அடைந்துள்ளது.

இலங்கைக்கு ஜெய்ப்பூர் அரங்கு புதிய இடமாகும். அவர்கள் இங்கு விளையாடும் முதல் போட்டி இன்று நடைபெறும் போட்டிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணியில் மீண்டும் இடம்பெறாமல் விடமாட்டேன்

## சபதம் செய்கிறார் கங்கூலி



கொல்கத்தா

இந்திய கிரிக்கெட்டில் கங்கூலியின் சகாப்தம் அனேகமாக முடிந்துவிட்டது. இனி இளமைக்கே முன்னுரிமை எனத் தேர்வாளர்களும் அடித்துக் கூறிவிட்டனர். ஆனாலும் கங்கூலி விடுவதாக இல்லை. துலீப் தொடரில் சதமடித்த பின்பும் ஏன் நீக்கினார்கள்? அதற்கான காரணத்தைச் சொல்ல வேண்டுமென முரண்டு பிடிக்கிறாராம்.

விளையாட்டு

அவர் அணியில் மீண்டும் இடம் பெறாமல் விடமாட்டேன் என சவால் விடுத்துள்ளார். இதற்காக உள்ளூர் போட்டிகளில் பங்கேற்று அடுத்தடுத்து சதமடிக்கவும் திட்டமிட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் விதிகளின்படி காயமடைந்த வீரர் உள்ளூர் போட்டிகளில் பங்கேற்று உடல்தகுதியை நிரூபிக்கவேண்டும். இதன்படி துலீப் தொடரில் பங்கேற்று சதமடித்த கங்கூலி உடல்தகுதியை நிரூபித்தார். உடனே அடுத்த மூன்று ஒருநாள் போட்டிகளுக்கான அணியில் வாய்ப்பு பெறுவாரென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தேர்வாளர்கள் மீண்டும் இவரைப் புறக்கணித்துவிட்டனர். இதில் பயிற்சியாளர் சப்பலின் சதி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இப்போதைக்கு இந்திய துடுப்பாட்ட வரிசை வலுவானதாகஉள்ளது.

அனுபவத்துக்கு சச்சின், ஷேவாக், ராவிட் ஆகியோர் உள்ளனர். யுவராஜ், மொகமட் கைவ் போன்ற அடுத்த தலைமுறை வீரர்களும் இருக்கிறார்கள். பதான், டோனி, யாதவ் போன்றவர்களும் பிரகாசிக்கின்றனர்.

இதில் யாதவுக்குப் பதிலாக வேண்டுமானால் கங்கூலியைச் சேர்க்கலாம். யாதவ் வளர்ந்துவரும் சகலதுறை வீரராக உள்ளார். மொகமட் கைவ் திரும்பிவிட்டால், யாதவின்இடமே கேள்விக் குறியாகிவிடும். ஆக, ராவிட் தலைமையில் இந்தியாவின் வெற்றி தொடரும்வரை மீண்டும் கங்கூலிக்கு வாய்ப்புக் கிடைப்பது மிகவும் கடினமே.




கங்கூலிக்கு 33வயதாகிவிட்டது. களத்தில் மந்தமாக இருப்பதால், களத்தடுப்பில் சொதப்புகிறார். விக்கெட்டுக்களுக்கிடையே விரைவாக ஓடுவதுமில்லை. உடல்தகுதியில் அக்கறை செலுத்தாததால், அடிக்கடி காயமடைந்துவிடுகிறார்.

பயிற்சியாளர், வீரர்களுடன் மோதல் போக்கைக் கையாள்வதால் அனைவரது ஆதரவையும் இழந்து தவிக்கிறார்.

இதேவேளை, கங்கூலியை அணியில் சேர்க்காததைக் கண்டித்து கொல்கத்தாவில் சுமார் 30 பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# மொஹாலியில் இந்திய ஸ்கோர் நூற்று இருபத்து மூன்று மட்டுமே

## சச்சின் பெற்றது 67



மொஹாலி

மொஹாலி போட்டியில் இந்திய அணி 123 ஓட்டங்களை மட்டுமே எடுத்ததாக ஸ்கோரர் ராகேஷ் சங்காய் உறுதி செய்துள்ளார். சச்சின் எடுத்த ஓட்டங்கள் 67ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்திய-இலங்கை அணிகளிடையேயான இரண்டாவது ஒருநாள் போட்டி மொஹாலியில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 122 ஓட்டங்களில் சுருண்டது. இதையடுத்து இந்திய அணி 20.2 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 126 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது. இதில் இந்திய அணி 123 ஓட்டங்களை எடுத்தபோதே வெற்றிபெற்றுவிட்டதாக ஸ்கோரர் ராகேஷ் நேற்றுமுன்தினம் கூறியுள்ளார்.

இவர் அளித்த பேட்டியில் - சச்சின் கடைசியாகச் சந்தித்த பந்தை பவுண்டரி அடித்தார். ஆனால், பந்து எல்லைக் கோட்டை எட்டுவதற்கு முன்னரே சச்சின் ஒரு ஓட்டத்தை ஓடி முடித்தார். அப்போதே இந்திய அணி வெற்றிபெற்றது மாதிரிதான். இதனால் நடுவர் பவுண்டரி சிக்னலைக் காட்டவில்லை. ஆனால் ஊடகங்கள் இதை பவுண்டரி எனத் தவறாக எடுத்துக்கொண்டு 126 ஓட்டங்களை எடுத்ததாகக் கூறியுள்ளன. இது தவறு. இந்திய அணி எடுத்தது 123 ஓட்டங்கள். சச்சின் 70 ஓட்டங்கள் அடிக்கவில்லை. 67 ஓட்டங்களை மட்டுமே எடுத்துள்ளார் என்றார்.

# இங்கிலாந்து - இந்திய அணிகள் மோதும் போட்டி அட்டவணை!

புதுடெல்கி

இங்கிலாந்து அணியுடன் இந்திய அணி மோதும் போட்டிகள் நடைபெறவுள்ள இடங்களை இந்திய கிரிக்கெட் சபை நேற்றுமுன்தினம் அறிவித்தது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தியாவுக்கு வரும் இங்கிலாந்து அணி 3 டெஸ்ட் மற்றும் 7 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

முதலாவது ஒருநாள் ஆட்டம் கோவாவில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அகமதாபாத் (மார்ச் 8-12), நாகபுரி (மார்ச் 16-20), மும்பை (மார்ச் 25-29) ஆகிய இடங்களில் டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து விளையாடவுள்ளது.

அதைத் தொடர்ந்து 7 ஒருநாள் ஆட்டங்களில் அந்த அணி விளையாடும். அவை ஏப்ரல் 4, 7, 10,13, 16, 19, 22 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன.

கோவாவைத் தொடர்ந்து இந்தூர், கௌகாட்டி, பாரீதபாத், கட்டக், கொச்சி, விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் ஒருநாள் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

டெஸ்ட் தொடரை தொடங்குவதற்கு முன்பாக 2 பயிற்சி ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி பங்கேற்கும். பெப்ரவரி 25-27, மார்ச் 2-4 ஆம் திகதிகளில் அவை நடைபெறவுள்ளன. எங்கெங்கு நடைபெறுமென்பது பின்னர் அறிவிக்கப்படும்.

# இரசாயன உரங்களின் பாவனையால் குடாநாட்டு நீர்வளம் மாசுபடுகின்றது

## துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ்

யாழ்ப்பாணம்—

எமது பிரதேச விவசாயிகள் மிதமிஞ்சிய அளவில் இரசாயன உரங்களையும், கிருமி நாசினிகளையும் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு நாம் பாவிக்கும் பசளை வகைகளிலிருந்து பெருமளவு நைற்ரேற் நிலத்தடி நீருடன் கலந்து விடுகிறது.

எமது விவசாயிகளது இவ்வாறான செயற்பாடுகள் எமது குடிநீர் வளத்தை மாசுபடுத்துவதில் கணிசமான பங்கினை வகித்து வருகின்றது என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு. மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.


யாழ். மாவட்டத்தின் ஐந்து வலயங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட நூறு பாடசாலைகளிலிருந்து கலந்து கொண்ட சுற்றாடல் முன்னோடிக் குழுப் பொறுப்பாசிரியர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்ட கருத்தரங்கு ஒன்று அண்மையில், மத்திய சுற்றாடல் அதிகார சபையினது யாழ்ப்பாண உப பிராந்திய ஏற்பாட்டில், யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு யாழ். மாவட்டத்தின் சூழலியல் நிலைமை என்பது தொடர்பாக கருத்துரை வழங்கும் போதே இவ்வாறு கூறினார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ். உப பிராந்திய உதவிப் பணிப்பாளர் எஸ். விஜித்தா, வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் உட்படப் பலர் கருத்துரை வழங்கிய இந்தக் கருத்தரங்கில் துணைவேந்தர் தொடர்ந்தும் உரையாற்றும் போது-

எமது பூகோளச் சூழலில் இயற்கையாலும், செயற்கையாலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது. செயற்கை என்று கூறும் போது மனிதனது செயற்பாடுகளே காரணமாய் அமைந்து விடுகின்றது. எமது பகுதிகளில், எங்களது செயற்பாடுகளால் இன்று மண், நீர், உணவு, காற்று என்பன மாசுபடுத்தப்பட்ட வகையிலேயே எமக்கு கிடைத்து வருகின்றது.

நாம் கொள்வனவு செய்யும் உணவுப் பொருட்களில் மிகமிக கவனத்தைச் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏனெனில் இன்று பெருமளவிலான மரக்கறிகளும், மீன்போன்ற கடலுணவுகளும் இரசாயன மருந்துகளது செறிவுக்கு உட்படுத்தப்பட்டே எமக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வகை உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் பலர் சுத்தம், போசணை, ஆரோக்கியம் என்பவற்றைப் பற்றிச் சிந்திப்பதை விடுத்து, பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தமது நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.



எனவே, இவைபற்றி ஆசிரியர்கள் தெளிவாக அறிந்துகொள்வதோடு, மாணவர்களிடமும் இவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஆசிரியர்களிடையே முதலில் விழிப்புணர்வு ஏற்படுமாயின், நாளைய மாணவர் சமூகம் நிச்சயமாகப் பாதுகாக்கப்படுவதோடு, அவர்களால் சூழலும் பாதுகாக்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

(31)

# குன்றும் குழியுமாக காணப்படும் கீரிமலை நகுலேஸ்வரா வீதி

யாழ்ப்பாணம்—

சில நாட்களுக்கு முன்னர் பெய்த கடும் மழை காரணமாக அளவெட்டி - கீரிமலையை இணைக்கும் நகுலேஸ்வரா வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

இந்த வீதி அளவெட்டி டச்சு வீதியுடன் இணையும் இடமானது நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாத காரணத்தால் ஏற்பட்டுள்ள பாரிய குழிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது.

இந்த வீதி புனரமைப்புத் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவைகள் முறைப்பாடு தெரிவிக்கப் பட்டபோதும் அது தொடர்பில் கவனம் எடுக்கப்படவில்லையென இந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த வீதியை ஏராளமான பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் பாவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(97)

# அளவெட்டி மாதர் சங்கத்துக்கு சுழற்சி முறையிலான கடன் வசதி

அளவெட்டி—

அளவெட்டி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு யு.என்.டி.பி. நிறுவனத்தால் இரண்டு லட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இந்தக் கடன் அங்கத்தவர்களிடையே பங்கீடு செய்யப்படவுள்ளது.

சுழற்சி முறையிலே வழங்கப்படவுள்ள இந்தக் கடன் வாய்ப்பின் போது சுயதொழில் முயற்சிகளில் அதிகம் ஈடுபடும் அங்கத்தவர்களுக்கே அதிக முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென யு.என்.டி.பி. நிறுவனம் தெரிவித்துள்ளது. அளவெட்டி வடக்கு கிராம சேவையாளர் கே.கணேஷதாஸினுடைய முயற்சியினாலேயே இந்தக்கடன் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாக மாதர் சங்கத் தலைவி தெரிவித்தார்.

(97)

# சமுர்த்தி நிவாரணம்

உடுவில்—

வலி.வடக்குப் பிரதேசத்தில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களுக்கும், இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிப்பவர்களுக்கும் விரைவில் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்காக சமுர்த்தி முத்திரைகள் தற்பொழுது விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதுவரை முத்திரை பெறாதவர்கள் உடனடியாக தமது பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு முத்திரையைப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(101)

# வலி.வடக்கு பிரதேச மலருக்கு கலைஞர்கள் விபரங்கள் கோரல்

உடுவில்—

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் அதன் எல்லைக்குட்பட்ட அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதான பிரதேச மலர் ஒன்றை வெளியிடத் தீர்மானித்துள்ளது.

இந்த மலர் வெகுவிரைவில் வெளியிடப்படவிருப்பதால் முன்னேற்பாடாக வலி. வடக்கில் வாழ்கின்ற, மறைந்த கலைஞர்களை ஆவணப்படுத்தும் செயற்பாடு இடம்பெறவுள்ளது.

இசைத்துறை, நாடகம், நடனம், சிற்பம், ஓவியம், படைப்பிலக்கியம், பௌராணிகர், சொல்லாடல், அழகியற்கலை, ஒளிப்படக்கலை, கிராமியக் கலை, கட்டடக்கலை, திரைப்படம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கிய, தற்போதும் சிறந்து விளங்குகின்ற கலைஞர்கள் பற்றிய பூரண விபரங்களைப் பொது மக்களிடமிருந்து, புலம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கலைஞர்களின் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, மறைந்த திகதி, அவர்களின் புகைப்படங்கள், ஆக்கங்கள் போன்ற விபரங்களை எழுதி அனுப்பிவைக்குமாறு வலி. வடக்கு பிரதேச சபை கலாசார உத்தியோகத்தர் எம்.அருள்சந்திரன் தெரிவித்துள்ளார். அல்லது 021-2223952 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் விபரங்களை அனுப்பிவைக்கலாமென அவர் தெரிவித்தார்.

(101)

# காணிகளுக்கு தற்காலிக அனுமதிப்பத்திரம்

உடுவில்—

வசாவிளான் கிழக்கு சுதந்திரபுரத்திலுள்ள அரச காணிகளில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களுக்கு காணிகளுக்கான தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் துரித காணி செயலணிக் குழுவின் உதவியுடன் இங்கு குடியிருக்கும் 98 குடும்பத்துக்கு இம்மாத இறுதியில் அனுமதிப் பத்திரம் வழங்கப்படவுள்ளதாகவும் அதற்கு முன்னேற்பாடாக அவர்கள் குடியிருக்கும் நிலம் அளந்து பங்கிடும் வேலைகள் தற்பொழுது இடம்பெற்று வருவதாகவும் வலி.வடக்கு பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார்.

(101)

# நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை அறை அமைக்கக் கோரிக்கை

நெடுந்தீவு—

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சை அறையொன்று தனியாக அமைக்கப்படவேண்டுமென கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற நெடுந்தீவுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நெடுந்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை- மருத்துவ தாதியர்களுக்கான தங்குமிடம், மாவட்ட வைத்திய அதிகாரிகளுக்கான தங்குமிடம் என்பன அமைக்கப் படவேண்டும் எனவும், வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள் நலன் கருதி நுளம்பு வலைகள், ஹரிக்கன் லாம்புகள் போன்றவையும் தேவையாகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளதுடன், தற்போது நடமாடும் வைத்திய சேவை இடம்பெறும் நெடுந்தீவு கிழக்குப் பகுதி நிலையத்தில் தளபாட வசதிகள் போதாமலிருப்பதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும், அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு சீரான சேவையை வழங்க ஆவன செய்யுமாறு அந்தக் கூட்டத்தில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(113)

# வீடமைப்புத் திட்ட பணிகள் ஆரம்பம்

உடுவில்—

வலி.வடக்குப் பிரதேச செயலக பிரிவில் உலக வங்கியின் ஆயிரம் வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்காக கிராமங்கள் தோறும் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆரம்ப கட்ட விபரம் திரட்டும் செயற்பாடுகள் கிராம சேவையாளர், கிராம அபிவிருத்தி உதவியாளர், கிராமிய புனரமைப்பு உத்தியோகத்தர் ஆகியோரைக் கொண்ட குழு வால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வன்செயல்களின்போது வீடு இழந்தவர்கள், வீடு சேதமடைந்தவர்கள் இதுவரை தமது பெயர் விபரங்கள் இடம்பெறாவிட்டால் உடனடியாக மேற்படி குழுவுடன் தொடர்புகொண்டு தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(101)

## நெடுந்தீவின் கடலோரப் பகுதியில்

# படகுகள் தரித்து நிற்பதற்கு போதியளவு வசதி இல்லை!



நெடுந்தீவு—

நெடுந்தீவில் வடகடலோரப் பகுதியில் கடற்தொழிற் கலங்களை பாதுகாப்பான முறையில் தரித்து வைக்கக் கூடிய வசதிகளற்ற காரணத்தால் கடற்தொழிலாளர் தமது வெளியிணைப்பு இயந்திரத்தின் பாதுகாப்புக் கருதி படகுகளை மாவிலித்துறைமுகப் பகுதியில் தரித்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

வட கடற்பகுதியில் கரையிலிருந்து சுமார் 25 மீற்றர் தூரமளவில் குறிப்பிட்ட பகுதிகளுக்கு மாத்திரம் கடலலை தடுப்புக் கல்லணை அமைக்கப்பட்டுள்ள போதும், அவை தற்போது சேதமடைந்துள்ளமையால் கடல் அலைகள் தற்போதைய வாடைக் காற்று காரணமாக வேகமாக கரையைத் தொடுவதால் அப்பகுதியில் தரித்து நிற்கும் படகுகள் சேதமடையும் நிலை ஏற்படுமாகையாலேயே படகுகள் அனைத்தும் மாவிலித்துறைமுகப் பகுதியில் நிறுத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(113)



பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் "பஞ்சாட்சரம் பா நாடகங்கள்" நூல் வெளியீட்டு விழாவின் போது நூலாசிரியரை இணுவில் கந்தசுவாமி கோவில் குருக்கள் உ.அபராஜிதசர்மா பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், நூலின் பிரதியை உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் வெளியிட்டு வைக்க இணுவில் இளந்தொண்டர் சபையைச் சேர்ந்த எஸ். அஜந்தன் பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.

(97)




# இயந்திரங்கள்

சிறுகதை

க.ஆதவன்

பலவகையான ஒலிகள் கேட்டன. நகரத்தின் மத்தியில் றூம் எடுத்திருக்கக் கூடாதுதான். காலையில் பறவைச் சத்தங்களுக்குப் பதிலாக பயங்கர வாகன உறுமல் சத்தங்கள்தான் கேட்கும். இந்த அதிகாலையில்கூட, தெருவில் ஏதோ அக்சிடென்ட் நடந்திருக்கவேணும். அம்புலன்ஸ் வண்டியும், பொலிஸ் வண்டியும் உறுமியபடி பாய்கின்றன. போர்வையினால் முகத்தையும் இழுத்து மூடிக்கொண்டு இன்னும் கொஞ்சநேரம் முடங்கலாம் என்றால்... விடவா போகுதுகள்.

சரி, இனி எழும்பவேண்டியதுதான். எழும்பி என்ன செய்யலாம்? முறுக்கிவிடப்பட்ட பொம்மைபோல வேகமாக இயங்கிக்கொண்டிருக்கும் இந்த இயந்திர மனிதர்களுடன் முகமே தெரியாதபடி கரைந்து விடவேண்டியதுதான். பின்னர் மாலையில் வந்து 'பற்றறியைக்' கழற்றிவைத்துவிட்டு, இயந்திரத்தைக் கழுவி விட்டு ஓய்வு கொடுக்கவேண்டும்.

மணிவண்ணன் தெருவிலிறங்கி...
வேகமாக நடந்து... ஓடி...
இயந்திர மனித சமுத்திரத்தினுள் மறைந்து போனான்.

இன்றைக்கு வேலைக்குப் போறேல்லை எண்டு முடிவெடுத்தாகிவிட்டது. கட்டிலில் புரண்டு படுத்தாலும் நித்திரை வந்தபாடில்லை. இரண்டு மைல் தொலைவில் இருக்கும் பார்க்கின் ஞாபகம் வந்தது. எழுந்து ஆடைகளை அணிந்துகொண்டு பார்க்கை நோக்கி நடக்கிறேன். வேலைக்குப் போனா என்ன? போகாட்டி என்ன? எல்லாம் ஒண்டுதான். வேலைக்குப் போய சக்தியை விர்யம் பண்ணினால் காசு கிடைக்கும். காசு கிடைத்தால் சாப்பாடு கிடைக்கும். சாப்பாடு கிடைத்தால் சக்தி கிடைக்கும். சக்தி கிடைத்தால் வேலைக்குப் போகலாம். வேலைக்குப் போனால் காசு... சுற்றிச்சுற்றி ஒரே சக்கரம். இந்த மனிதர்கள் எப்படி இயந்திரமானார்கள்? நானும் எப்படி இயந்திரமானேன்?

மாலா நேற்று வந்தாள். நீண்ட நாட்களின்பின்னர் சந்தித்ததில் பேரானந்தம். கைகளைப் பற்றியபொழுது தெரிந்தது அவளும் இயந்திரமாகி சக்தியை விரயம் பண்ணுகிறாள். 'லஞ்ச் பிறேக்' முடியப் போகுது. போயிட்டுவாறன்' சொல்லி சமுத்திரத்தினுள் தொலைந்துபோனாள்.

அவளது ஆரம்பகாலம் எவ்வளவு சுகமானது. விசாரிப்புகளுடன் குழையக் குழைய வந்தவள் அவள். அந்தக் குழையலிலும் மனிதத்திலும் கரைந்துபோன அந்தக் காதல் இதயங்கள் எப்படி இயந்திரங்களாயின? ஊரிலிருந்தபோது எந்தத் தடையுமில்லாத அங்கீகரிக்கப்பட்ட காதல் அது. மணிவண்ணனுக்கும் எவ்வளவு நேரம் இருந்தது. மாலாவுக்கும் நேரம் இருந்தது. கனவுகளில் மிதக்கவும்... கடிதங்களில் காவியம் படைக்கவும்... படங்கள்... திருவிழாக்களில் மறைவிடம் நாடவும் எவ்வளவோ இருந்தது. இந்தக் காதலுக்கு இப்போது தடையாக இருப்பது நேரம் கிடைக்கவே மாட்டேன் என்கிறது.

இன்னும் இரு மாதங்களில் 'திருமணம' செய்வதாக ஏற்பாடு. திருமணத்திலும் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் அவளும் வேலைக்குப் போகவேணும். அவனும் வேலைக்குப் போகவேணும். சிலவேளை இரவு வேலையும் வந்தமையலாம். பின்னர் பிள்ளைகள் பெற்றாலும் அவர்களுக்கென உழைக்க வேணும்.

காதலின் இயல்பான வெளிப்பாடான திருமண முடிவு வெறும் கட்டாய வெளிப்பாடாய் முடியக்கூடும். இந்த இயந்திர சமுத்திரத்தினுள் காதலும் மறைந்து தொலைந்து போகும். சுமைகளைக் குறைக்கவெனச் சுகமாகிவந்த காதல், தானே ஒரு பெரிய சுமையாய்... பாரமாய்... நெஞ்சில் அழுத்தும். அவளும் 'பிஸியாய்' நானும் 'பிஸியாய்' இந்த 'பிஸிச்' சூறாவளி எமது எல்லாவற்றையுமே அள்ளிச் செல்லும். கவிதைகளை வாசித்துக்காட்டமுடியாது. ஒரு ஓவியத்தை வரைந்து பின்னர் அவள் விமர்சனத்துக்காக பல நாட்கள் காத்திருக்கவேண்டும்.

அவளும் வேலைக்குப் போகவேண்டும். நானும் அதிகாலை வேலைக்குப் போவதற்காக சக்தியை, நேரத்தை சேமிக்க வேண்டும். காதலை, அன்பை... சுகானுபவத்தை தியாகம் செய்யவேண்டும்.

**வேலைக்குப் போனால் காசு கிடைக்கும். காசு கிடைத்தால் சாப்பாடு கிடைக்கும். சாப்பாடு கிடைத்தால் சக்தி கிடைக்கும். சக்தி கிடைத்தால் வேலைக்குப் போகலாம். காதல் - அன்பு - மனிதம் - அமைதி கிடைக்காது.**

பார்க்கில் 'காலைச் சூரியன் தன் கோலங்களை ஒளி அலைகளால் தூவியிருந்தான். நகர இரைச்சலில் இருந்து விடுபட்டு வந்தது மணிவண்ணனுக்கு மாபெரும் ஆறுதலாய் இருந்தது. பறவைகளின் சத்தங்கள் காதுக்கு இனிமையாய் இருந்தது. மெல்லிய தென்றல் முகத்தைத் தழுவியது. மனசு ஆறுதலாக இருந்தது. பெரிய மூட்டையைச் சுமந்துவந்து இறக்கிவைத்தபின் ஏற்படும் ஆனந்த மூச்சு அவன் மூக்கிலிருந்து இயல்பாய் வந்தது.

அந்த வெள்ளைக்காரக் கிழவன் இன்றும் ஓவியம் வரைந்துகொண்டிருந்தான். மணிவண்ணன் இரண்டு, மூன்று தடவை அவன் ஓவியம் வரைவதைப் பார்த்திருக்கிறான். ஊரில் மணிவண்ணனும் ஒரு சிறந்த ஓவியன். இந்த ஆர்வத்தினால் கிழவனுடன் கதைத்திருக்கிறான். கிழவன் ஒரு அரைச்செவிடு. இந்த இயந்திர இரைச்சல்கள் தான் அவனைச் செவிடாக்கியிருக்கவேண்டும். "Have a nice time:" என்று சொன்னால் கிழவனுக்கு 'Have an ice cream' என்றுதான் கேட்கும். கிழவனை நெருங்கிச் சென்றான் மணிவண்ணன். கிழவன் இவனைப் பார்த்து புன்னகைத்துவிட்டு மீண்டும் வரையத் தொடங்கினான். மணிவண்ணன் ஒரு சிகரெட்டை எடுத்துக் கிழவனிடம் நீட்டினான். கிழவன் மகிழ்ச்சியுடன் அதை வாங்கிப் பற்றினான். மணிவண்ணன் கேட்டான்.

'நீ சந்தோஷமாக இருக்கிறாயா?' என்று

'எனது மனதில் இரைச்சல்களும் அவசரங்களும் இல்லை.

தூரிகையின் நுட்பமான நெளிவுகளுடன் வர்ணங்கள் அமைதியாக நகர்வதை நான் ரசிக்கிறேன். அவசரப்பட்டால் அதனை இரசிக்க முடியாது. சில வர்ணங்கள் மிக மிக மெதுவாக நகர்த்தப்படுவதையே விரும்புகின்றன. சில வர்ணங்கள் அப்படியே நின்றுவிடுவதையே விரும்புகின்றன. ஒரு புள்ளி போட்டால் போதும். அவை அமைதியாக அதில் நின்று சிரித்துக்கொண்டு ஆனந்தமாக இருக்கும். நான் இயற்கையுடன் ஒன்றிவிடுவதால் இயற்கையின் நுட்பமான, மென்மையான நகர்வுகளுடன் சமாந்தரமாக நகர்கிறேன். இயற்கையின் நகர்வு நின்றவுடன் எனது தூரிகையும் நின்றுவிடும்.'

மூச்சுவிடாமல் கிழவன் சொல்லிவிட்டு மீண்டும் வர்ணத்தில் தூரிகையைக் குழைத்தான். மணிவண்ணனுக்கு பல விஷயங்கள் புரியத் தொடங்கியது. ஏதோ நினைத்தவனாக விறு விறு என்று ஓடத் தொடங்கினான். நகரத்தின் எந்த இரைச்சலும் இப்போது அவன் காதுகளில் விழவில்லை. நேராகத் தன் றூமுக்குள் போய் எப்போதோ வாங்கி வைத்திருந்த தன் தூரிகைகளையும், வர்ணங்களையும் எடுத்து ஒரு பையில் போட்டான். அப்போது 'ரெலிபோன்' அடித்தது. மணிவண்ணனின் ஊர்த்தோழன், இங்கும் ஒன்றாய் வேலை பார்ப்பவன் கனகசபை பேசினான். கனகசபை மணிவண்ணனின் றூமுக்கு விசிட் பண்ணி கிட்டத்தட்ட ஒரு வருசமாகிறது. வேலை பார்க்கிறதோடு சிறிய கடை ஒன்றுக்கும் பங்காளி. சரியான 'பிஸி' ஊரில் பெரும்பாலும் ஒவ்வொருநாளும் மணிவண்ணன் வீட்டே வருவான். மணிவண்ணன் ஓவியம் வரைவதை அடிக்கடி கதையளந்து குழப்புறவன். இப்போ ஒரு வருஷமாக வர முடியாத அளவுக்கு 'பிஸி' மணிவண்ணன் Bag ஐ தோளில் கொழுவிக்கொண்டு ரெலிபோனைக் காதில் வைத்தான்.

'என்ன மச்சான் மணி வேலைக்கு வரவில்லை. என்ன சுகமில்லையோ'

'...'

"ஏன்ராப்பா, சொல்லன் என்ன நடந்தது?"

"நான் வேலையை விடப்போறன்"

"ஏன்? "

"நான் இயந்திரம் இல்லை"

"அடுத்தடுத்த மாசம் உனக்கும், மாலாவுக்கும் கலியாணம் எல்லே"

"நான் கலியாணம் முடிக்கேல்லை"

"என்ன நடந்தது?"

"மாலாவுக்கு நேரமில்லை... அவள் ஒரு இயந்திரம்... நீ ஒரு இயந்திரம்... என்னைச் சுற்றி எல்லாம் மனிதம் இல்லாத இயந்திரங்கள்... இயந்திரமாய் இருக்க எனக்கு விருப்பமில்லை. நான் மனிதன்"

"ரெலிபோனைத் துண்டித்துவிட்டு
மணிவண்ணன் தெருவிறங்கி...
வேகமாய் நடந்து... ஓடி...
இயந்திர மனித சமுத்திரத்தினுள் மூழ்கி எழுந்து...
தத்தளித்து... நீந்தி...
எங்கோ மறைந்து போனான்.



## "மனச வளத்தேன்... எம் மனசு வளத்தேன்..."

இலைகள் காய்ந்தால்
உயிர் உள்ள கொடியும்
பட்டுப் போகிறது
ஆனால்
உன் உடைகள் காய்ந்தால்
உயிரற்ற கொடியும்
உயிர் பெறுகிறதே

குழந்தையின் கையில் இருந்த மிட்டாயை பிடுங்கி ஒளித்துக் கொண்டு காக்கா தூக்கிட்டுப் போயிடுச்சு என்று விளையாட்டுக் காட்டினாய் நீ! குழந்தையோ இல்லை என்றபடி உன்னையே சுற்றிச் சுற்றி வந்தது.

நானும் ஒரு குழந்தைதான், கையில் மனதை வைத்துக் கொண்டு நீ எப்போது பறிப்பாய் என்று உன்னையே சுற்றிச் சுற்றி வரும் குழந்தை.

நீ என் மனதைப் பறித்துக் கொண்டு காக்கா தூக்கிக்கிட்டுப் போயிடுச்சு என்றெல்லாம் சொல்ல வேண்டியதில்லை. நானும் இல்லை என்று உன்னைச் சுற்றி வரமாட்டேன். பதிலாக நீ பறித்த அடுத்த நொடியே பறிச்சுட்டா .... பறிச்சுட்டா என்று கத்திய படியே உலகமெல்லாம் ஓடுவேன்.

நீ என் மனதை அருகே வந்து தொட்டுப் பறிக்க வேண்டும் என்பதில்லை. கண்ணுக்கெட்டிய தூரத்திலிருந்தே ஒரு புன்னகை வலை வீசினாலோ.... ஒரு பார்வை தூண்டில் வீசினாலோ கூடப் போதும்.

காக்காய் உட்கார்ந்ததும் விழும் பனம் பழமாய் என் மனது உன் மடியில் விழுந்து விடும்.

அதை எங்கே ஒளித்து வைத்துக் கொள்வது என்கிற கவலையோ சிரமமோ உனக்கு வேண்டாம். நீ பறித்தவுடன் அதுவே ஓடிப்போய் உன் இதயத்துக்குள் ஒழிந்து கொள்ளும்.

கடைசியில் அந்தக் குழந்தையிடம் நீ மிட்டாயைத் திருப்பிக் கொடுத்த மாதிரி என் மனதை எனக்குத் திருப்பித் தரவேண்டியதில்லை.



அது உனக்கே சொந்தமானது.

ஒருவரின் கையில் ஒப்படைப்பதற்காகவே ஒரு மகளைப்பெற்று வளர்க்கும் பெற்றோர் போல நான் உன்னிடம் ஒப்படைப்பதற்காகவே நான் என் மனதை வளர்த்திருக்கிறேன்.

மகளைக் கொடுத்தவர்கள் கூட அவ்வப்போது அவள் புகுந்த வீட்டுக்கு வந்து எப்படியம்மா இருக்கே? என்று கேட்டுவிட்டுப் போவார்கள் ஆனால் ...

நான் உன்னைப் பார்க்க தினம் தினம் வந்தாலும் என் மனதைப் பற்றி ஒரு நாள் கூட ஒரு வார்த்தை கூட உன்னிடம் கேட்கமாட்டேன்.

என் பேச்சையெல்லாம் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்த நீ உன் மனதைப் பற்றி ஒன்றும் கேட்க மாட்டா!

ஆனால் அதற்குப் பதிலாக என்னையே கேட்பாயே! என்றாய் தோரணையாக

ச்சே...ச்சே நான் கேட்க மாட்டேன் ஆனால் நீ பறிக்கிற என் மனதே எனக்கு உன்னைக் கேட்டு வாங்கிக் கொடுத்து விடும் என்றேன்.

ஆசை... ஆசை என்று சிரித்தாய் அவ்வளவு தான் அந்தச் சிரிப்பில் விழுந்தது என் மனது உன் மடியில்!

இந்த வேப்ப மரத்தின்
பழுங்கள் இனிக்கிறதே என்றாய்
ஒன்றும் தெரியாதவளைப் போல்
இனிக்காதே பின்னே...
இப்படி நீ
மரத்தில் ஊஞ்சல் கட்டி ஆடினால்.

வேடந் தாங்கலுக்குப் போகலாமா என்றாய்
ஆயிரம் மைல்களுக்கு
அப்பால் இருந்தெல்லாம்
பறவைகள் வந்து அங்கே
குவியும் போது
அருகிலிருக்கும் நீ போகவில்லை
என்றால்
அது சரணாலயமா என்ன ?

தமிழ்சங்கர்

# புரிதலை நோக்கிய ஓர் நகர்வு

ஒவ்வொருவரும் ஒரு உணர்வை வெவ்வேறு விதமாய் வெளிப்படுத்துகின்றனர். குழந்தை தனக்கு நேரும் ஒவ்வொரு உறுத்தலுக்கும் அழுகையையே வெளிப்படுத்துகின்றது. அதைத் தாயினால் என்ன தேவை என உணரமுடிவதற்குக் காரணம் தாய் குழந்தையுடன் இணைந்து இருப்பதாலாகும்.

ஒரு மனிதரை இன்னொரு மனிதர் எப்படிப் புரிந்துகொள்கின்றனர். அவரின் உணர்வுகளுக்கு மற்றையவர்கள் எப்படிப்பட்ட அங்கீகாரத்தை அளிக்கின்றார்கள் அல்லது எப்படி எடுத்துக்கொள்கின்றார்கள் என்பதில் தங்கியுள்ளது.

புரிதல் என்பது எதற்கும் அவசியப்பட்டது. இலக்கியம், கலை பற்றியான புரிதலை இன்னமும் சிக்கலுடன் எதிர்கொள்கின்றோம். இதனால் பலவற்றை நிராகரிப்புச் செய்கின்றோம்.


ஒரு இலக்கியப் படைப்பைப் படிக்கும்போது எழுத்தாளரின் பின்னணியை வைத்துக்கொண்டு, அவருக்காகப் பிரதியை நிராகரிக்கும், சிலாகிக்கும் நிலையை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலை எம் மத்தியில் உள்ளது.

நற்குணங்களும், வீரமும் நிறைந்த நாயகனும், அவனுக்கு எதிர்குணங்களைக் கொண்ட குரூரமான வில்லனும், பண்பாட்டைக் கட்டிக்காக்கும் பெண்ணும் உற்ற இலக்கியங்களைப் புகழ்ந்து பாராட்டும் நாம், எமது அவலங்களைக் காட்டும் உணர்வுகளை வெளிக்காட்டும் இலக்கியங்களை, கலையை ஏற்றுக்கொள்வதில்லை. அதன் நிலைப்பாட்டைப் புரியாமல் அல்லது புரிய எத்தனிக்காமல் - வேண்டாதவை, புரியாதவை என ஒதுக்கி வைக்கின்றோம். அதாவது சமூகத்துள் இருந்து உள்வாங்கும் விடயம் ஒன்றைத் தன்னுடைய அனுபவத்துடன் ஒன்றித்து ஒரு படைப்பாக்குகின்றோம்.

இதிலிருந்து படைப்பைப் புரிய எழுத்தின் அனுபவத்துடன் ஒன்றிக்கவேண்டிய தன்மை புலப்படும்.

வாசிப்பதன் மூலம் பொழுது கழியலாம். பொழுதைக் கழிக்க வாசிப்பது என்பது வியாபார நோக்கை முதன்மையாகக்கொண்டுவரும் படைப்புகளுக்கு மட்டும் பொருந்தும். இந்தவகைக்குள் இந்தியாவில் இருந்துவரும் பல சில்லறை ஏடுகளை இனங்காட்டலாம். இவற்றைப் புரிய வாசிப்பு, அறிவு மட்டும் போதுமானது. இலக்கியதரம் வாய்ந்தவை எனக் கருதும் கலைத்துவத்துடன் கூடிய சமூக அக்கறையை உள்வாங்க சிந்தனையும் தேவைப்படும்.

இந்தப் படைப்புகள் பல சாதனைகளைச் செய்கின்றது. வாசகருக்கு ஒரு புது உணர்வை, புது அனுபவத்தை, புது அறிவை, புது எச்சரிக்கையை ஏற்படுத்தி புதியதொரு மனிதராக நம்மை நமக்கும், பிறருக்குமுன் காட்டக்கூடியது மட்டுமன்றி, நம் நிலையை உணரப்பண்ணுவதிலும் முக்கிய இடம் பெறுகின்றது. இதனூடு இலக்கியங்கள் ஏற்படுத்திய போராட்டங்களையும் கண்டு கொள்ளலாம். அத்தகைய வலிமை இந்தப் படைப்புகளுக்கு உண்டு.



இத்தகைய படைப்பு ஒன்றை புரிய முனைகையில் முதலாவதாக -அதனுடன் அது வெளிப்படுத்தும் உணர்வுடன் இணையவேண்டிய நிலை உள்ளது. அப்போது அதன் பூரணமான தாக்கத்தை நாம் உணர்ந்துகொள்ளமுடியும். இந்தப் படைப்புக் குறித்து நம்மைச் சிந்திக்கத் தூண்டும் அந்தப் படைப்பு குறித்து மேலதிகமான கேள்விகளை நம்முன் எழச் செய்யும். மலின எழுத்துகள் இவை எதையும் செய்வதில்லை. அரைத்த சம்பலை மீண்டும் மீண்டும் மீண்டும் அரைப்பதுபோலவே அரைத்துக்கொண்டு வாசகரை ஒரு பொம்மையாகக் கருதியே செயற்படுகின்றது. காதல், சோகம், குடும்பம் என்ற வட்டத்துள் இன்னமும் கட்டிப்போட முனைகின்றன. இவைகளைப் புரிய வாசிப்புப் பழக்கம் மட்டும் போதுமானதாக இருக்கின்றது. இதை வாசிப்பின் முதற் படியாகக் கொள்ள முடியும். ஆனால் உணர்வை மொழியாகக் கொண்டவற்றுக்கு வாசகரின் உணர்வுபூர்வமான இணைவு அவசியமாகின்றது.

தன்னை ஒரு சிறந்த வாசகர், இலக்கியவாதி எனக் கருதிக்கொண்ட - கூறிக்கொள்ளும் பிரதிநிதிகள் இது மக்களுக்கு விளங்காது என்ற முத்திரை குத்திவிடுவதுடன், வாசித்துப் புரிய முடியாது அல்லது விளங்காது என்ற பட்டியலினுள் இட்டு, அதையே அடுத்த தலைமுறைக்கும் கையளிப்புச் செய்கின்றனர். இதனால் ஒரு சிறந்த படைப்பு இருட்டடிப்புச் செய்யப்படுவதுடன், இலக்கிய வளர்ச்சிப் போக்கும் மந்தகதியடைகின்றது. இந்தத் தவறின் ஆரம்பம் எங்கு தோன்றுகின்றது.

வாசிக்கப் புத்தகம் கேட்டு தொந்தரவு செய்யும் சாதாரணதர பரீட்சை எடுத்துவிட்டு விடுமுறையில் வீட்டில் இருக்கும் பெண்ணுக்கு "கபாலபதி" தொகுப்பை வாசிக்கக் கொடுத்தேன். இரண்டு தினங்களின் பின்னர் வந்த அவள் இரண்டு விடயங்களைக் கூறினாள்.

1. இதை வாசித்தபின்னர் சரியான பயமாக இருந்தது. அதனால்தான் ஆணிவைத்துக் கொண்டு வந்தேன் எனத் தலைமுடிக்குள் வைத்திருந்த ஆணியைக் காட்டினாள். இது ஒவ்வொருவர் மனநிலையையும், அனுபவமும் சம்பந்தப்பட்ட விடயம்.

இலக்கியங்களைப் புரிந்துகொள்வதற்கு எடுக்கக்கூடிய முயற்சிகள் என்னவென்பதை நோக்கமுயலும்முன் இந்தக் கட்டுரையைப் பிரித்துக்கொள்வது இலகுவானதாக இருக்கும்.

அ. படைப்பு எங்கிருந்து ஆரம்பமாகின்றது.

ஆ. அது என்ன செய்கின்றது.

இ. அதைப் புரிவது எப்படி - (வாசகரின்) எமது பங்கு என்ன? உணர்வு, அனுபவத்துக்கு கலைத்துவத் தன்மையைக் கொடுக்கையில் அது கலையாக, இலக்கியமாக பரிணமிக்கின்றது எனலாம். அனுபவமும், அறிவும் இணைந்த உணர்வின் மொழியே இலக்கியம். அறிவுசார்ந்த அனுபவ உணர்வு எங்களின் சமூகத்தில் இருந்து பெறப்படுகின்றது. நானும், நீங்களும் அனுபவித்த ஒன்றாகவும் அல்லது கண்ட, கேட்ட ஒன்றாகவும் கூட இருக்கலாம். இந்தப் படைப்பின் வெளிப்பாட்டை கந்தரராமசாமி கதையையும் ஒரு கலை என்று நம்புகின்ற கலைஞன் தன்னுடைய ஆத்மாவைப் பிரதிபலிக்கத் தோதான, உடைந்த கண்ணாடித் துண்டுகள் எங்கேயாவது கிடைக்கின்றனவா என்று பார்த்துக் கொண்டே போகின்றான். அதில் ஒரு துண்டைப் பொறுக்கி, தன்னுடைய கலை ஆத்மாவின் ரசத்தை கொஞ்சம் அதன் பின்னால் பூசி வைக்கின்றான். அப்போது நமக்கு நம் முடைய முகத்தை அதில் பார்க்கக் கிடைக்கின்றது. ரசிக்கின்றோம். ரசிப்பது கண்ணாடித் துண்டையல்ல கலைஞனின் ஆத்மாவை.

2. இந்தக் கதைகளில் உள்ளதெல்லாம் உண்மையாக நடந்ததா? இது ஒரு விடயத்தைக் கோடிட்டுக் காட்டியது. புரிதல் என்பது ஒவ்வொருவரின் நிலையைப் பொறுத்தது. புரியாமை என்பது முயற்சி செய்யாமை. சோம்பேறித்தனம் இதனடிப்படையில் புரிவதற்கு

- விளங்கிக்கொள்ளவேண்டுமென்ற முனைப்பு
- படைப்பை உள்வாங்கும் மனநிலை
- படைப்பின் உணர்வுடன் ஒன்றுபடுதல்
- படைப்பின் பாத்திரமாக அதனுள் நுழைதல்

போன்ற விடயங்களைக் கவனத்திற் கொள்வதனூடு, புரிதலை இலகுபடுத்திக் கொள்ளலாம். இன்னமும் ஆர்வமிருப்பின் திரும்பத்திரும்ப வாசிக்கலாம்.


ஆரம்பம் சிரமம் தரக்கூடியதாகவும், நேர அவகாசத்தைக் கூடுதலாக எடுப்பதாகவும் இருப்பினும் தொடர்பயிற்சியும், முயற்சியும் சிறிதுகாலத்தில் பயனளிக்கும். -திசேரா.

நன்றி மறுகா

# பேச்சுமொழியில் எமது பண்பாடு - கலாசாரம் வளரவேண்டும்

பேச முற்படுதல், விளக்கங்களின் உள் நின்று அறிந்து கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளில் விவரிக்கப்படுகின்றது. மேடைப்பேச்சு, உறவுகளிடையே பரிமாறிக்கொள்கின்ற பேச்சு இதற்கும் இடையே சொற்களின் பிரயோகங்களில் ஒரு மாற்றமேயொழிய மற்றும்படி கருத்து ஒன்றாகத்தான் இருக்கிறது.

எமது பண்பாடு, கலாசாரம் இலக்கிய முறைகளுக்குள்ளேதான் இருக்கின்றது. அதைத்தான் திரும்பித் திரும்பி பேசுகின்றோம். நாம் சொல்லுகின்ற பாதை சரியில்லாத போதுதான் அதனைத் திருத்தி விடுவது போல் எமது கலாச்சாரம் சீரழிந்து கொண்டு செல்கின்ற போது, அதனை சரிப்படுத்தவும் நாம் மேற்கொள்ளும் முயற்சியில் பேச்சும் ஒன்றாகும்.



சந்தியில் பேசுவது சரியில்லை யென்று பெரியோர்கள் சொல்வதுண்டு. சந்தியில் நின்று பேசலாம். ஆனால் பலதரப்பட்டவர்கள் அங்கு கூடும் போது பல தரப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு, அதில் நின்று பேசிய பயனற்ற பேச்சுக்கள் தான் வீடு போய்ச் சேர்கிறது.

நண்பர்களாக இருந்தால் அவர்களுடன் பேசுகின்றபோது வெளிப்படையாகப்பேசுகின்றோம். அந்த இடத்தில் பேசிய வார்த்தைகள் அந்த இடத்திலே விட்டுவிட்டுப் போகின்ற போதுதான் அடுத்த நாளும் அதே இடத்தில் சந்திக்கின்ற நட்பு பேச்சில் உயிர் பெறுகிறது.

இப்படியாகப் பேச்சு மொழிகளில் பலரை கவரக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே பேசுவதன் மூலம் பலதரப்பட்ட கருத்துக்களையும், அதேவேளை எமது பண்பாட்டுக் கலாசாரங்களையும் வளர்த்துக்கொள்ளமுடிகிறது.

ஒருவருடன் பேசுகின்ற போது அவருக்குப் பிடிக்காத முறையில் பேசுவதனால், அவரின் முகத்தினைப் பார்த்து அவருக்கு பிடிக்காததொன்றாகப் பேசுகின்றேனா என்று தெரிந்து கொண்டு பேசாமல் இடையிலே நிறுத்தி விடுதல் நல்லது.


பேச்சானது ஒருவனில் இருந்து இன்னொருவனுக்குக் கடத்தப்படுகின்ற போது அந்தப் பேச்சு மொழி பலதரப்பட்ட விளைவுகளைக் கொண்டுவரும். அதாவது அந்த விளைவுகள் நல்லவைகளாகவும் இருக்கலாம். கெட்டவைகளாகவும் இருக்கலாம். மற்றவர்கள் பேசுகின்ற போது அதனை நாம் கேட்டுப் புரிந்து கொண்டு பேசுதல் பிரச்சினைக்கு வழி வகுக்காது.

ஒருவரினால் எப்போ நடந்த பாதிப்பினை அந்த நபரினை சந்திக்கும் போதெல்லாம் அந்தப் பாதிப்பினை மனதிலே வைத்துக்கொண்டு அவருடன் பேசுதல் என்றைக்குமே நல்ல உறவு இருக்கப்போவதில்லை.

ஒருவருக்குப் புரியும்படி பேசுதல், புரியாதபடி பேசுதல் என்று பேச்சு நடையில் ஒரு வகை இருக்கிறது. புரியாதபடி பேசுதல் அவர் தப்பித்துக்கொள்கிறார் என்று தெரிகிறது. இப்படியாகப் பேச்சு நடையில் பலதரப்பட்ட மாற்றங்கள் இருக்கிறது. இதில் நாங்கள் தான் இடத்துக்கேற்ற முறையில் பேசிப்பழக்கிக்கொள்ளவேண்டும்.

- செல்வா.

# மழை பற்றிய குறிப்புகள்



வகுப்பறையில் அவள் விட்டுச் சென்ற
கையடக்கக் குடை
காலையில் அவள் மேல் விழ இருந்த
மழைத்துளிகளால் நனைந்து
ஈரப்பதத்துடன் கட்ட விழ்ந்து
கருப்பு பூச்செண்டு போல உள்ளது.
மழை வந்ததும் அவளுக்கு ஞாபகம் வரக் கூடும்
தன் குடைபற்றிய நினைவும் - காலையில் தான்
குடை பற்றி மழையில் நடந்த நினைவும்.

மழைக்காலத்துத் தொடர் மழையில்
தோட்டத்து மரங்கள் ஈரம் பாய்ந்திருந்தன.
பெரிய மரங்களின் விரிந்த
பட்டைகளில் சிறு நீர்த்தேக்கம்
தோட்டம் முழுவதும் ஈரவாடை
நீர்சல நிமிர்ந்த மால் போல
மரத்தடி வேரில் தன் வெண்கொற்றக் குடையை
விரித்தபடி எழுந்தது காளான்

சர்க்கஸ் கூடாரத்தின் மீது
மழை விழுந்து சரிந்திறங்கத் தொடங்கியது.
பெரிய வளையத்திற்குள் ஊடுருவி
வித்தை காட்டும்
பூனை, நாய், கரடி, புலி, கிழட்டுச் சிங்கம்
வீடு திரும்பும் வழியெல்லாம்
தேங்கிய மழை நீரில்
[illegible] பாதம் பட்டு விரியும் வளையங்களில்
உள்ளிருந்து பாய்கிறது ஒரு நதி.

மழை மெல்ல விழும் தார்ச்சாலையில்
ஓடும் பைக்கில் ஓட்டிச் செல்லும் கோடி
பேருந்து நிழற்குடையில் ஒதுங்கும் யாசகன்
சிமெண்ட் நடை பாதையில் அவன் விட்டுச் சென்ற
வாய் நெளிந்த பாத்திரத்தில்
நாணயங்கள் நிழலாட
நிறைகிறது மழை நீர்

சுழல் காற்றால் ஜன்னல் கதவுகள்
சிறகடித்து ஒலித்திடும்
திரைச் சீலைகள் காற்றலையில் மிதக்கும்
சோவெனப் பெய்யும் அதிகாலை மழையில்
அறைக்குள் அத்து மீறி நுழையும் ஈசல்கள்
பழுப்புச் சிறகுகள் கொண்ட
பொன் நிறத் தேவதைகளே.

சரவணன்
நன்றி உயிர்மை

# மருதங்கேணி வைத்தியசாலையின் நீண்டநாள் தேவை தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது!

## பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன்

ஆழியவளை

கடந்தகால போர் அனர்த்தங்களால் மருதங்கேணி வைத்தியசாலையின் சேவைகள் சீர்குலைந்துள்ளன. இங்குள்ள மக்கள் வைத்திய அதிகாரி மூலமோ வைத்தியசாலை அபிவிருத்திச்சபை மற்றும் பொதுமக்கள் மூலமோ வைத்தியசாலையின் தேவைகளை, கோரிக்கைகளாக எமக்கு முன்வைப்பதன் மூலம் சுகாதாரத் திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் உதவிபெற்று இவ்வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய முடியும் என பிரதி மாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவன நிதி பங்களிப்புடன் அமைக்கப்பட்ட சிற்றுண்டிசாலை திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை பொறுப்பதிகாரி டொக்டர் யூடி றமேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

நீண்டநாள் கோரிக்கை ஒன்று நிறைவேறியுள்ளது. இந்த சிற்றுண்டிச்சாலை மூலம் நோயாளர்கள், பணியாளர்களின் சிரமம் நீங்கியுள்ளது.

இந்தப் பிரதேசத்தின் வைத்திய சேவைக்கு உயிர்நாடி மருதங்கேணி வைத்தியசாலையே. இதன் வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுத்துள்ளோம். இன்னும் கொடுப்போம். அனைவரது ஒத்துழைப்பின் மூலம் இந்தக் கிராமிய வைத்தியசாலை சுற்றியல் கூறு வைத்தியசாலையாக ஏன் மாவட்ட வைத்தியசாலையாகவும் தர உயர முடியும். பல வருடங்களாக இயங்காதிருந்த பல்வைத்தியசேவை சுவீடிஷ் நிறுவன நிதியுதவியுடன் வாரம் இருமுறை இயங்குகின்றது. 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை கொழும்பு இராம கிருஷ்ணமிசன் நிறுவனத்தினர் தந்துதவியுள்ளனர். தொலைபேசி வசதி இந்த வைத்தியசாலைக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுச்சுகாதார மருத்துவ மாதர், பொதுச்சுகாதார பரிசோதகர், தாதிகள், பரிசாரகர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோருக்கும் பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன. பயிற்சியின் முடிவில் இந்த வைத்தியசாலையின் ஆளணிப்பற்றாக்குறை நீங்கும்.

இந்தக் கட்டடம் அமைப்பதில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவன ஊழியர்கள் திறம்பட உழைத்துள்ளனர். கரித்தாஸ் - கியூடெக் யாழ். மாவட்ட இயக்குனர் அருட்தந்தை சீ.ஜெயக்குமார் அடிகள் மற்றும் நிறுவன ஊழியர்களுக்கும் திணைக்களம் சார்ந்த நன்றியைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

# தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கண்காட்சி!



கிளிநொச்சி

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் கரைச்சிப் பிரதேச சபையின் ஏற்பாட்டில், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தால் நடைமுறைப் படுத்தப்படும் 47 முன்பள்ளிகளின் சிறார்களது கண்காட்சி நிகழ்வு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் ஆரம்பமானது.

முதல் நிகழ்வாக மங்கள விளக்கை முன்பள்ளிகளின் முதன்மை ஆசிரியைகள் வரதா, அனுஷா, கரைச்சிப் பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் நேசராணி பெற்றோர் சார்பில் தாரணி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியை முரளி முன்பள்ளி ஆலோசகர் பரஞ்சோதியும், தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியைக் கிளிநொச்சி மாவட்ட திட்ட அலுவலர் சிவஞானசுந்தரமும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக் கொடியை பிரதேச கட்டமைப்புக் குழுச் செயலாளர் சிறீதேவனும் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி வலய இணைப்பாளர் திருமதி ராஜன் சக்திவேல் அவர்களால் கண்காட்சி மண்டபம் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டு கண்காட்சியைப் பார்வையிடும் நிகழ்வு ஆரம்பமானது.

முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கத்திறன்களையும், அவர்களது கல்வி வளர்ச்சி தொடர்பான தேடல்களையும் ஊக்குவிக்கும் நோக்கில் ஆசிரியர்களாலும், பெற்றோர்களாலும் இந்த ஆக்கப் பொருள் கண்காட்சி நிகழ்வு அமையப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில முன்பள்ளிச் சிறார்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொதுமக்களெனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் தொடர்ந்தும் சிறார்களின் கண்காட்சி நிகழ்வு இடம்பெற்ற வண்ணமுள்ளது.

## கிளிநொச்சியில் திருக்குறள் மாநாடு

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடத்தும் திருக்குறள் மாநாடு எதிர்வரும் 3ஆம், 4ஆம் திகதிகளில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முதல் நாள் நிகழ்வு காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறும். இந்தக் கருத்தரங்கு அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி மு.திருநாவுக்கரசு, பொன். கணேசமூர்த்தி, ஏ.விஜயசுந்தரம், தி.வேல்நம்பி விரிவுரையாளர் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்வு தமிழ்ச் சங்கத் தலைவர் வே.பரமநாதபிள்ளை தலைமையில் நடைபெறும். சிறப்புச் சொற்பொழிவு, விருந்தினர் உரை பரிசில் வழங்கல், கௌரவிப்பு நிகழ்வுடன் கலை நிகழ்வுகளும், பண்பாட்டு ஊர்வலமும் இடம்பெறவுள்ளது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட 8 வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன!

வடமராட்சி

வடமராட்சியில்சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட எட்டு வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எட்டு வீதிகளையும் புனரமைப்புச் செய்வதற்காக 215 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். அரச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் வடமராட்சியில் சேதமாகிப்போன வியாபாரிமூலை வீதிக்கு இரண்டு லட்சத்து 65 ஆயிரம் ரூபாவும், கடற்கரை வீதிக்கு ஏழு லட்சத்து பத்தாயிரம் ரூபாவும், தும்பளை வீதிக்கு மூன்று இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும், பவுண்றி வீதிக்கு ஏழு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், போக்கறுப்பு நதியா வெட்டை வீதிக்கு 44 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஆழியவளை வீதிக்கு பத்து லட்சத்து 58 ஆயிரம் ரூபாவும், வெற்றிலைக்கேணி வீதிக்கு 85 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் மணற்காடு பொற்பதி வீதிக்கு 53 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த வீதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் உடனடியாகவே தொடங்கப்படவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### ஒக்ரோபர் - 31

1754 : நியூயோர்க்கிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகம் 'கிங்ஸ் கொலிஜ்'என்ற பெயருடன் நிறுவப்பட்டது. 1784இல் இதனது பெயர் கொலம்பியா கல்லூரி என மாற்றப்பட்டது. 1912இல் கொலம்பியா பல்கலைக்கழகமாக இது உருப்பெற்றது.

1803 : ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்து, அவர்களை எதிர்த்து இறுதி வரை போராடிய வன்னிக் குறுநில மன்னன் பண்டாரவன்னியன் ஆங்கிலேயத் தளபதி வொன்றிபேக்கினால் தோற்கடிக்கப்பட்ட நாள்.

1864: நிவேடா அமெரிக்காவின் 36ஆவது மாநிலமாக இணைந்தது.

1876 : பேக்கர் கஞ்சில் அடித்த சூறாவளியினால் ஏறக்குறைய இரண்டு லட்சம்மக்கள் உயிரிழந்தனர்.

1902 : பசுபிக் கடலின் குறுக்காக முதன் முதலாக தந்திக்கம்பிகள் அமைக்கும் வேலைகள் நிறைவடைந்தன.

1918 : துருக்கி, நேச நாட்டுப்படைகளிடம் சரணாகதியடைந்தது.

1922: இத்தாலியில் முசோலினியின் அமைச்சரவை பதவி ஏற்றது.

1931: தமிழ் மொழியில் வெளிவந்த முதலாவது பேசும் படமான 'காளிதாஸ்'சென்னையில் திரையிடப்பட்டது. இந்தப் படத்தில் கதாநாயகி பேசுவது, பாடுவது எல்லாம் தமிழில். கதாநாயகன் பேசுவது, பாடுவது எல்லாம் தெலுங்கில். இது காரணமாக தெலுங்கு மொழியில் வெளிவந்த முதல் பேசும் படமாகவும் இதுவே அமைந்து விட்டது.

1951 : போக்குவரத்து மிகுந்த வீதிகளில் பொதுமக்கள் குறுக்காக கடந்து செல்லக்கூடிய இடங்களைக் குறிப்பிடும் மஞ்சள் கோட்டுக் குறியீடுகள் முதன்முதலாக லண்டன் வீதிகளில் அமைக்கப்பட்டன.

1956 : சுயஸ் கால்வாய் பிரச்சினை காரணமாக பிரித்தானியா, பிரான்ஸ் விமானங்கள் எகிப்திய விமானங்களைக் குண்டு வீசித் தகர்த்தன.

1960 : பங்களாதேஷில் அடித்த சூறாவளி காரணமாக கடல் பொங்கியதனால் 10,000 பேருக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

1961 : ஹோண்டூரஸ்சில் மணிக்கு 320 கி.மீ வேகத்தில் வீசிய 'ஹாட்டி' என்றழைக்கப்பட்ட சூறாவளி காரணமாக நூற்றுக்கணக்கானவர்கள் இறந்து போனார்கள்.

1966 : இந்திய நீச்சல் வீரரான 'மிஹிர் சென் ', பனாமா கால்வாயை நீந்திக்கடந்தார்.

1983 : அணுஆயுத தயாரிப்பை நிறுத்துமாறு கோரி அமெரிக்க செனட்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

1984: இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி தன் வீட்டிலிருந்து அருகிலுள்ள அலுவலகத்திற்கு நடந்து சென்று கொண்டிருக்கும் போது அவரது மெய்ப்பாதுகாவலரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1987 : இந்திய கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர், சர்வதேச ஒருநாள் டெஸ்ட் போட்டிகளின் போது 3000 ஓட்டங்களை எடுத்த முதல் வீரர் என்ற சாதனையைப் பெற்றுக்கொண்டார். 168 ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டு 102 இனிங்சில் விளையாடி, 3092 ஓட்டங்களைப் பெற்று சாதனை புரிந்த அந்த சாதனைப் போட்டி கான்பூரில் இந்தியாவுக்கும் நியூசிலாந்திற்கும் இடையே நடைபெற்றது.
இந்தப் போட்டியிலும் இன்னுமொரு சாதனையும் படைக்கப்பட்டது. இந்திய வீரரான சேட்டன் சர்மா என்ற வீரர் அடுத்தடுத்த மூன்று பந்துகள் மூலம் ரூதர் போர்ட், ஜயான் ஸ்மித், இவான் சாட்பீல்ட் ஆகிய மூன்று நியூசிலாந்து வீரர்களையும் வீழ்த்தினார்.

1992 : சூரிய மையக்கொள்கையை முன்வைத்தமைக்காக சர்ச்சினால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்ட நிலையில், கண்பார்வை இழந்து குருடராக வாழ்ந்து 1642இல் கலிலியோ இறந்து போனது வரலாறு. அவர் இறந்து 350 ஆண்டுகள் கடந்த நிலையில் அவரது அந்தக் கொள்கைகளை பாப்பரசர் இரண்டாம் ஜோன்போல் அங்கீகரித்தார்.

1995: ரஷ்ய ஆர்டிக் பகுதியில் யூனின்ஸ்க் என்ற இடத்துக்கு அருகில் எண்ணெய்க் குழாயில் உடைப்பு ஏற்பட்டது. இருபது லட்சம் பீப்பாய்கள் எண்ணெய் கசிந்து ஆறுகளையும், சுற்றுச் சூழலையும் மாசுபடுத்திவிட்டது.

தொகுப்பு-சந்துரு

# வட்டக்கச்சி - மாவடி கிராமத்தில் பயனாளிகளுக்கு கால்நடை வழங்கல்!

வட்டக்கச்சி

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக்கழக நிறுவனத்தினால் போரூட் நிறுவன நிதியுதவியுடன் கடந்த 21ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மாவடி கிராமத்திலுள்ள வறிய குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு கால்நடைகள் வழங்கப்பட்டன.

இதில் 8 பயனாளிகளுக்கு ஆடும், 5 பயனாளிகளுக்கு கோழிகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் மாவடி, ஆலடி ஆகிய இரு கிராம மக்களுக்கு கால்நடை வளர்ப்பு தொடர்பான பயிற்சி வகுப்பும் நடத்தப்பட்டது. கால்நடைகளை நோய்களிலிருந்து எவ்வாறு பராமரிப்பது தொடர்பான கருத்துரையை கால்நடை அபிவிருத்தி உத்தியோகஸ்தர் கௌரிதிலகம் வழங்கினார்.

கிளிநொச்சி கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் பயிற்சி பெற்ற பணியாளர்கள் இது தொடர்பான கருத்துக்களையும் பயிற்சிகளையும் வழங்கினர்.

(09)

நமது ஈழநாடு

## வைர வரிகள்

ஒரு மூடன் தன்னுடைய வாயில் தன் அறிவைப் பெற்றிருக்கிறான். ஓர் அறிஞன் தன் வாயை அறிவால் நிரப்பி வைத்திருக்கிறான்.

சுரா

## நமது நோக்கு

# ஒஸ்லோ பேராசிரியரின் கருத்தும்; அது குறித்த சில கருத்துக்களும்!

'இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் காத்திரமான முறையில் சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ளவேண்டுமெனில் - தென்னிலங்கை அரசியல் சக்திகளிடம் அரசியல் ரீதியிலான அறிவு முதிர்ச்சி ஏற்படவேண்டிய அவசியம் உள்ளது. இல்லையேல் எதிர்காலத்தில் சமாதானத் தீர்வு குறித்த பேச்சுவார்த்தை நகர்வுகளில் அர்த்தபுஷ்டியான தீர்வெதனையும் எட்டமுடியாது போகும்.'

இப்படியொரு அழுத்தமானதும், ஆழ்ந்து சிந்திக்கவேண்டியதுமான ஒரு கருத்தை மிகவும் நெருக்கடியான ஒரு அரசியல் சூழல் உருவாகிவரும் இந்த நேரத்தில் வெளியிட்டுள்ள ஒஸ்லோ பல்கலைக்கழக மனித புவியியல் பேராசிரியரும், இலங்கையின் இனமுரண்பாடுகள் குறித்து மிகநீண்டகாலமாக, அதாவது ஒரு தசாப்தத்திற்கும் அதிக காலமாக ஆய்வு செய்து வருபவருமான கிறிஸ்ரியன் ஸ்ரொக் என்பவரின் வார்த்தைகளுள் பொதிந்துள்ள தீர்க்கமான அறிவுரையை தென்பகுதி அரசியல் தலைமைகள் புரிந்துகொள்ளுமா என்பது சந்தேகமேயாகும்.

அந்தளவுக்கு நியாயபூர்வமான அறிவுரையை ஏற்று ஜனநாயகப் பண்புடனும், மனித உரிமைகளை மனிதநிலையில் நின்று உணரும் தன்மையுடனும் மட்டுமல்ல, தேசிய நன்மை கருதிய - சமூகப்பொறுப்புடனும் உள்வாங்கி, ஆராய்ந்து அதில் பொதிந்துள்ள அரசியல் யதார்த்தத்தை உணர்ந்து, பேரினவாத சிந்தனையிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளும் மனப்பக்குவம், சிங்கள அரசியல் தலைவர்களுக்கு தற்போதைக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. இப்போதைக்கு ஏற்படக்கூடும் என்றும் எண்ணத்தோன்றவில்லை.

அரசியல் முதிர்ச்சி என்பது அறிவுறுத்தலின்மூலம் உடனடியாக ஏற்படக்கூடிய ஒன்றுமல்ல...

இனமுரண்பாடுகளை வினைத்திறனுடன் கையாள்வதற்கு இலங்கையில் தற்போது நிலவும் ஜனநாயக நடைமுறையில் கணிசமான அளவு மாற்றம் ஏற்படவேண்டியது அவசியம் என்றும் கூறும் ஒஸ்லோ பல்கலைக்கழக பேராசிரியரின் கருத்து, ஒரு செய்தியை மிகத்தெளிவாக உணர்த்தவே செய்கிறது.

அதாவது, இலங்கை அரசியலின் ஜனநாயகத் தன்மையானது - தற்போதைய நிலையில் - இனமுரண்பாடுகளை நிரந்தரமாக தொடரவைக்கவே உதவும் என்பதே அவரின் கருத்தாக உள்ளது எனலாம்.

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னரான அரசியலும், அரசியல்வாதிகளும் ஜனநாயகம், சோஷலிசம், தர்மிஷ்டம் (தார்மீகம்) என்றெல்லாம் பெரியளவில் 'பீற்றிக்'கொண்டாலும், இன்று வரைக்கும் நடைமுறையில் இருப்பதும், நடைமுறைப்படுத்தி வருவதும் சிங்கள - பௌத்த பேரினவாத நலன்கருதிய அரசியல் செயற்பாடுகளேயாகும்.

இதுதான் இன்றைய இனமுரண்பாடுகளுக்கும், மோதல்களுக்கும் மூலகாரணமாகும்.

தென்பகுதிச் சிங்கள அரசியல் தலைமைகளுக்கிடையேயான அதிகாரக் கதிரைக்கான - போட்டாபோட்டிக்கான மூல அரசியல் கோட்பாட்டிற்கான சித்தாந்தமானது - ஜனநாயகத்தைப் புறந்தள்ளிய இனவாதமாகவே அமைந்துள்ளமைதான் அனைத்துத் துயரங்களுக்கும், அவலங்களுக்கும் தளமாகியுள்ளது.

இன்றைய நிலையில் இலங்கையில் நிலவும் பெயரளவிலான ஜனநாயகமென்பது சிறுபான்மையினரின் அடிப்படை அரசியல்-வாழ்வியல் மற்றும் மனித உரிமைகளை வெளிப்படையாகவே நிராகரித்துள்ள சூழலில், தென்பகுதித் தலைமைகள் பேசும் அரசியலில் ஜனநாயக ரீதியிலான முதிர்ச்சி என்பது உடனடியாக ஏற்படும் என எவரும் நம்புதல் முட்டாள்தனமானதாகும்.

அப்படி ஒரு அரசியல் முதிர்ச்சி தென்பகுதி தலைமைகளுக்கு வந்துவிட்டதாக நம்பிய தமிழர் தரப்பு அல்லது சிறுபான்மை மக்கள் தரப்பு, கடந்தகாலங்களில் இனமுரண்பாட்டுத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களில் இறங்கி பட்ட அவமானமும், ஏமாற்றமும், துயரங்களும் அளவிடமுடியாததாகும்.

இனமுரண்பாட்டிற்கு சிங்கள - பௌத்த பேரினவாத ஜனநாயகம் முன்வைத்த தீர்வு, சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரைக் கொண்டதெனில், யுத்தமா? சமாதானமா? என்ற போருக்கான அறைகூவல் சவாலை வெளிப்படுத்தியதெனில், தென்பகுதித் தலைமைகளின் அரசியல் முதிர்ச்சியின் அளவு எப்படியானது என்பதை விபரிக்க வேண்டிய அவசியமேயில்லை.

இந்த யுத்த அரசியல், இன்றைய சமாதான காலகட்டத்திலும்கூட, தென்பகுதித் தலைமைகளால் மேலும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டே வருகிறது என்ற செய்தியையே சமகால ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்கள் அழுத்தமாகத் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், ஒஸ்லோ பேராசிரியரின் தென்பகுதி அரசியல் தலைமைகளின் அரசியல் முதிர்ச்சி தொடர்பான அறிவித்தல் இப்போதைக்கு சமாதான முயற்சிகள் எந்தவிதமான ஆக்கபூர்வமான முன்னேற்ற நம்பிக்கை எதனையும் தருவதாக இல்லை என்ற மற்றொரு தகவலையும் வெளிப்படுத்துவதாகவும் உள்ளது என்றே கூறவேண்டும்.

இங்கே கவனிக்கவேண்டிய முக்கிய விடயம் என்னவெனில்- சமாதான முயற்சிகளுக்கு பிரதான அனுசரணையாளர்களாக இயங்கும் நோர்வே நாட்டின் பேராசிரியர்தான் தென்பகுதி தலைமைகளின் அரசியல் முதிர்ச்சியின்மை குறித்த கருத்தையும் வெளிப்படுத்தியுள்ளார் என்பதேயாகும்.

சர்வதேச சமூகம் - குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் - இப்பேராசிரியரின் கூற்றைக் கவனத்தில் குறித்துக்கொள்வதும் அவசியமேயாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்

செய்தி - யுத்தநிறுத்த உடன்படிக்கையில் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ அதிருப்தி



## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரித்தால் யாருக்கு இலாபம்?

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் வாக்களிப்பு இன்னும் சில தினங்களில் நடைபெறவிருக்கிறது. இதில் நமக்கு அக்கறை இருக்கவேண்டிய அவசியமில்லைத்தான். ஆனாலும், நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று ஒரு முடிவெடுக்கவேண்டுமல்லவா? என்று கேட்டபடி வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை ஜே.ஆர்.ஜெயவர்த்தன உருவாக்கியபோதே தம்மையும் தமது ஐக்கிய தேசியக் கட்சியையுமே கருத்தில் கொண்டிருந்தார். இதற்கு மாறாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சந்திரிகா அம்மையார் பதினொரு ஆண்டுகள் நிறைவேற்று அதிகாரங்களை அனுபவித்தார். இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்னிடம் இருக்கிறது. நான் பதவியேற்றதும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்று சொல்லித்தான் பதவிக்கு வந்தார். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை ஒழிப்பேன் என்று சொல்லிக் கொண்டுதான் பதவிக்கு வந்தார். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவுமில்லை, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை ஒழிப்பதற்கு முயற்சி செய்யவுமில்லை. இந்தப் பதவியில் மேலும் ஓராண்டு இருப்பதற்கே அவர் முயற்சி செய்தார். நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து இந்த வருடத்துடன் ஜனாதிபதி பதவியிலிருந்து விலக வேண்டிய நிலை.

இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒத்துழைப்பது சம்பந்தமாகப் பேச்சு நடத்தியிருக்கிறார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுகிறார். இவர் ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் ஒப்பந்தம் செய்திருக்கிறார். இதனால் மஹிந்தவுக்கும் சந்திரிகா அம்மையாருக்கும் முறுகல் ஏற்பட்டிருக்கிறது. இதை வெளிக்காட்டாமல் மஹிந்தவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றிரண்டில் கலந்து கொண்டாலும் மனப்பூர்வமாக அவரின் வெற்றிக்காக உழைப்பதாக இல்லை. அநுராவும் மஹிந்தவின் வெற்றிக்கு உழைக்கவில்லை. இந்தநிலையில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு வடக்கு - கிழக்கு மாகாணத் தேர்தல் வெற்றிக்கு அமைச்சரும், ஈ.பி.டி.பியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தவிடமே மஹிந்த ஒப்படைத்திருக்கிறார். இந்தத் தேர்தலில் மஹிந்த வெற்றி பெற்றாலும், ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றாலும் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கப் போவதில்லை என்பது தமிழ் மக்களின் பொதுவான அபிப்பிராயமாக இருக்கிறது. இதனால் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்கவேண்டுமென்று விடுதலைப் புலிகள் மக்களுக்குச் சொல்லவில்லை. யாருக்கு வாக்களிக்கவேண்டுமென்று மக்கள் தாங்களாகவே தீர்மானித்து அவரவர் விருப்பப்படி வாக்களிக்கலாமென்று சொல்லிவிட்டார்கள் என்று நான் சொன்னேன்.

மஹிந்தவும் சரி, ரணிலும் சரி தமிழ் மக்களின் உரிமைகளைப் பற்றியோ தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் சுதந்திரமாக வாழ்வதற்குரிய வழிகள் பற்றியோ எதுவும் வாக்குறுதியளிக்காமல் இருவரும் படைபலத்தைப் பெருக்கவும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கவுமே முனைந்து நிற்கின்றனர். இந்த நிலையில் - இந்த ஜனாதிபதித் தேர்தலில் எவருக்கும் வாக்களிக்காமல் தேர்தலைப் புறக்கணிக்கவேண்டுமென்று மாணவர் அமைப்பும் மற்றும் பொதுமக்கள் சிலரும் குரல் கொடுத்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் இந்த ஜனாதிபதி தேர்தலைப் புறக்கணிப்பது நல்லதா? என்று பரமசிவம் கேட்டார்.

தமிழ் மக்களுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மஹிந்த வந்தாலும் சரி, ரணில் வந்தாலும் சரி எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை. இன்றுள்ள அரசியல், சமூக வாழ்க்கை நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. இதனால் தேர்தலைப் புறக்கணிப்பதில் தவறில்லை என்றே நினைக்கிறேன் என்று சொன்னேன்.

ஆனால், 1994 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் விடுதலைப் புலிகள் அக்கறைகாட்டவில்லை. தமிழ்க் கட்சிகளும் இந்தத் தேர்தலில் கவனம் செலுத்தவில்லை. தீவுப் பகுதிக்குப் போகவே முடியவில்லை என்று ஆனந்த சங்கரியார் அன்று சொன்னதாகவும் ஞாபகம். இந்தத் தேர்தலில் மக்களும் வாக்களிக்கப்போகவில்லை. புறக்கணிக்கப்போவதாக யாரும் அறிவிக்கவில்லை. ஆனால் மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். இதனால், தீவுப்பகுதியில் சிலர் வாக்களித்தனர். இந்தத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது, ஐந்நூறு வாக்குகள் பெற்றவர்களும் வெற்றிபெற்றவர்களாக மக்களின் பிரதிநிதிகளாக அறிவிக்கப்பட்டனர்.

இந்தத் தேர்தலில் கண்காணிப்பாளர்களாகக் கடமையாற்றியவர்களில் ஒரு பகுதியினர் இந்தத் தேர்தல் வாக்களிப்பில் முறைகேடுகள் நடந்ததாகத் தெரிவித்திருந்தனர். பவ்ரல் அமைப்பில் ஒரு பிரிவினர் இந்தத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகக் கொள்ளமுடியாதென்றும் தெரிவித்திருந்தனர். கண்காணிப்புக்குழு தனது அறிக்கையில் சில சிபாரிசுகளும் தெரிவித்திருந்தது. இதை அரசாங்கமோ, தேர்தல் ஆணையகமோ கவனத்தில் எடுக்கவில்லை. ஐந்நூறு வாக்குகளுடன் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட ஒன்பது பேரும் நாடாளுமன்றத்தில் ஆறு வருடங்களும் அங்கம் வகித்துச் சகல வசதிகளையும் அனுபவித்தனர் என்று பரமசிவம் சொன்னார்.

இப்பொழுது வடக்கிலும் கிழக்கிலும் தேர்தலில் மோசடி நடைபெறாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்திருக்கிறார். அதாவது இப்பகுதியில்தான் மோசடி நடக்கும். இதர பகுதிகளில் மோசடி நடக்காதென்று அவர் கருதுகிறாராக்கும். தென்னிலங்கையிலிருந்து வடக்கு-கிழக்குத் தேர்தல் கடமைகளுக்கு அரசாங்க அதிகாரிகளும், ஊழியர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம். அதாவது மோசடியைத் தடுப்பதற்கு சிங்கள அரச ஊழியர்கள் தமிழ்ப் பகுதிக்கு கடமையாற்ற அனுப்பப்படுவார்களாம் என்று நான் சொன்னேன்.

இந்தச் சமயத்தில் தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணித்து வாக்களிக்காமல் விட்டால் தென்னிலங்கையிலிருந்து வரும் ஊழியர்களைத் தமக்குச் சாதகமாக்கி சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளருக்கு மோசடி மூலம் வாக்குச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படமாட்டாதென்பது என்ன நிச்சயம். 1989ஆம் ஆண்டுத் தேர்தலில் பிரேமதாசவுக்கு எதிராக இப்படியொரு குற்றச்சாட்டு கூறப்பட்டது நினைவிருக்கா என்று கேட்டேன்.

வாக்குகள் கட்டுக் கட்டாகப் போடப்பட்டதாக முன்னர் புகார் கூறப்பட்டிருந்தது தெரியும். இப்பொழுதும் வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்லாமலிருந்தால் வாக்களிக்கச் செல்லும் இரண்டொரு வாக்காளர்களை வைத்து வாக்குகளைத் தமக்குச் சாதகமானவருக்கு சேர்க்கலாமல்லவா? இரண்டு வாக்குகள் பெற்று ஒருவர் மந்திரியாகிவிடலாமல்லவா? தேர்தலில் வாக்களிக்க விருப்பமில்லையானால் அந்த வாக்குச் சீட்டை செல்லாததாக்குவது நல்லதென்றே தோன்றுகிறது.

எதற்கும் தமிழ் மக்கள் நன்கு சிந்தித்து முடிவெடுக்கவேண்டும். இதே சமயம் இந்த தேர்தலினால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனுமில்லை; இந்தத் தேர்தலை மக்கள் விரும்பவுமில்லை.

இது சிங்கள தேசம் தனது அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கு நடத்தும் தேர்தல். இதில் தமிழ் மக்களுக்கு என்ன பயன் என்று கேட்டபடி பரமசிவம் நடந்தார்.

தேர்தல் அறிக்கை ... சிலம்பு

# தேர்தல் அறிக்கைகளும் தமிழ்த் தேசியமும்






பகுதி - 8

இலங்கைத் தீவில் புத்த மதம் அரச மதமாக ஏற்கனவே ஏற்கப்பட்டுள்ளது. இது சிங்கள பௌத்த நாடு என்பதில் சிங்களத்துக் கட்சிகள் அனைத்தும் பொதுவான கொள்கையைக் கொண்டிருக்கின்றன. இனப்பிரச்சினைத் தீவில் உண்மையான அக்கறை இருக்குமானால் இலங்கைத் தீர்வு "ஒரு மதச் சார்பற்ற நாடாகும்" என்று எவராவது கூறியிருப்பர். ஆனால் புத்தமத வளர்ச்சி, பாதுகாப்பு என்பவற்றுக்கு அதிக அக்கறையும், நிதி ஒதுக்கீடும் செய்வதையே இரு கட்சிகளும் கொண்டிருக்கின்றன. இது, ஒன்றே இரு கட்சிகளினதும் உண்மையான உள்ளக் கிடக்கைகள் என்ன என்பதைக் காட்டுகின்றன.

தேர்தல் என்று வந்தால் தங்களால் முடியுமோ, முடியாதோ வாக்குறுதிகளை அள்ளிவீசுவதே அரசியற் கட்டுகளின் வழமையான நிலைப்பாடாகும். அதே வழியிலேயே ரணிலும், மஹிந்தவும் மிகப் பிரயத்தனப்பட்டுச் சொற்களைத் தேடித் தேர்தல் அறிக்கைகள் தயாரித்துள்ளனர். பிரச்சினைகளைத் தீர்த்தால் அடுத்து என்ன செய்வது என்று தெரியாத நிலை ஒன்று. பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்று தெரியாத நிலை மற்றொன்று. எனவே, அரசியல் பதவிகளில் நிலைத்திருக்க எதையாவது எழுதி மக்களின் கவனத்தைத் திருப்பி வாக்குகளைக் கவர்வதே அவர்களின் நோக்கமாகும். இதற்காக எதையும் கூறுவார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை தமிழர் தாயகம், சுயநிர்ணயம், இறைமை என்பன அசைக்கமுடியாத அடிப்படை உரிமைகளாகும். இவற்றை ரணிலின் தேர்தல் அறிக்கையிலும் காணமுடியவில்லை. மஹிந்த ராஜபக்ஷாவின் தேர்தல் அறிக்கையிலும் காணமுடியவில்லை. சமாதானம் என்ற சொல்லைப் பயன்படுத்தி மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றுவதிலேயே இருவரும் கவனம் செலுத்தியுள்ளனர். இருவரும் சிங்கள மக்களின் சம்மதம் அல்லது அங்கீகாரம் பெற்ற தீர்வையே தமிழ் மக்களுக்கான தீர்வாகவைக்க முற்படுகின்றனர்.

தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாகத் தமக்கென்றொரு தாயகத்தைக் கொண்டிருந்தவர்கள் என்பதையும், 1833 ஆம் ஆண்டுக்குப் பின்னரே வெள்ளையரால் இன்றுள்ள ஆட்சிமுறைமை ஏற்படுத்தப்பட்டது என்பதையும் மூடிமறைத்து, இது ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதைக் காட்டவே விரும்புகின்றனர்.

இந்த நாடு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலே இனத்தவர் ஆகியோருக்குச் சொந்தம் என்று இருவரும் கூறுகின்றனர். இவ்வாறு கூறுவதன் மூலம் இலங்கைத் தீவின் வடக்கு கிழக்குப் பகுதிகள் தமிழர் தாயகம் என்ற வரலாற்று ரீதியான உண்மையை ஏற்க மறுக்கின்றனர்.

இருவரினதும் தேர்தல் அறிக்கைகள் இந்தக் கருத்தையே கொண்டிருக்கின்றன. எனவே இந்தத் தேர்தல் அறிக்கைகளை வைத்துப் பார்க்கும் பொழுது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இவர்களில் எவர் பதவிக்கு வந்தாலும் தமிழர்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்பதே வெளிப்படையாகும்.


மேடைகளில் நின்று பேசுவதாலும், முழக்கமிடுவதாலும் இவர்கள் எமது உரிமைகளைத் தரப்போவதில்லை. எமது வாக்குகள் எமது தீர்வுக்கானதாக இருக்கவேண்டும். இவர்களுக்கு வாக்களிப்பதால் எமக்கு எந்தத் தீர்வும் கிடைக்கப்போவதில்லை என்பதே இவர்களது தேர்தல் அறிக்கைகள் காட்டும் உண்மையாகும்.

தமிழினம் சிங்களத் தலைவர்களை நம்பி ஏமாறுவதற்கு இனிமேலும் தயாராயில்லை என்பதை உலகத்துக்குக் காட்ட இந்தத் தேர்தலைத் தமிழ் மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். 1977 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் எடுத்த உறுதியான முடிவில் இருந்து விலக மாட்டார்கள் என்பதை இந்தத் தேர்தல் மூலமும் தமிழ் மக்கள் உலகுக்குக் காட்ட வேண்டியது வரலாற்றுக் கடமையாகும்.

அயலகமும், ஐரோப்பிய ஒன்றியமும் தமிழ் மக்களது இந்தத் தீர்வைப் பார்த்த பின்னராவது தங்கள் நிலையை மீள்பரிசிலனை செய்துகொள்ளும் நிலை வரவேண்டும்.


அதற்கான தீர்ப்பைத் தமிழ் மக்கள் வழங்கவேண்டும். வழங்குவார்கள்.

# ஓவியர் முத்தையா கனகசபை; ஒரு வாக்குமூலம்!



1920. 03.12 கொழும்புத்துறையில் ஓர் விவசாய குடும்பத்தில் பிறந்தேன். சிறுவயதில் இருந்தே ஓவியம் வரைவதில் ஆர்வம் இருந்தாலும், 20 வயதின் பின்னரே அதன் வேகம் என்னிடத்தில் அதிகரித்துக் காணப்பட்டது.

ட'தின்னான்கரை வயதில் எஸ.எஸ்.சியில் சித்தியடைந்தேன். சம்பத்திரிசியார் கல்லூரியில் 3 வருடங்கள் ஆங்கிலம் கற்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 3 வருடங்கள் பொது ஆசிரியர் பயிற்சியைப் பெற்றேன். பின்னர் பம்பலப்பிட்டி வெலிசற என்ற இடத்தில் விவசாயம், மாடுவளர்ப்பு, கோழி வளர்ப்பு, கட்டடம், மரவேலை போன்றவற்றில் பயிற்சி பெற்றேன்.



கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில் 2 வருடங்கள் (1949-1950) பயிற்சி பெற்ற நான் - 21 வருடங்கள் ஆசிரியராகவும், 18 வருடங்கள் கலை, கைப்பணிக்கான கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளோன்.

நான் ஓர் முழுநேர ஓவியன் கிடையாது. எதைக்கண்டேனோ அதை, எனது ஆத்ம திருப்திக்காக வரைகிறேன். காலம், இடம், சூழலுக்கேற்ப எனது ஓவியங்களின் கருப்பொருட்கள் மாறுபடுகின்றன. யதார்த்தக் கதைகள், புராணக் கதைகள் மற்றும் இடப்பெயர்வு போன்ற சமூக உள்ளடக்கங்களை எனது படைப்புகளில் காணலாம்.

நான் இழப்புகள், அங்கவீனங்கள் என்பனவற்றை நினைப்பதில்லை. கொடுமைகள் பாவச் செயல்களைக் கீறினால், என்னால் தாங்கமுடியாது. உயிரை வைத்துத்தான் கீறுவேன். அதனை விலத்தி வரைந்தால், தூக்கமே வராது.

ஓவியத்தில் பார்த்து வரைதல், பாராமல் வரைதலுக்கான பயிற்சியாகும். பார்த்து வரைதலுக்கும், சிறந்த பயிற்சி அவசியம். பார்த்து வரைதலில் அனுபவம் வந்த பின் பாராமல் வரையலாம். இலக்கணவிதிகளை மீறி படைத்தல் பிழையில்லை. கலைக்காக இலக்கணமே அன்றி இலக்கணத்துக்காக கலை இல்லை. இது எல்லாக் கலைவடிவங்களுக்கும் பொருந்தும். வரம்புகளை மீறி கலை உருவாகுமானால், அவையே பின்னர் இலக்கணமாகி ஏற்றுக்கொள்ளப்படும். எப்படியாயினும், எல்லாக் கலைஞர்களும் இலக்கணங்களை அறிந்திருத்தல் வேண்டும். அகத்தில் கண்ட காட்சிகளை கற்பனையுடன் ஒழுங்குபடுத்தி வெளிப்படுத்த வேண்டும்.

எனது ஓவியங்களை ஆரம்பத்தில் நீர் வர்ணங்களைக் கொண்டு உருவாக்கினேன். அது காட்சிகளை எளிமையாக்க எனக்கு உதவியாக இருந்தது. தற்போது கன்வஸ்சிலும், எண்ணெய் வர்ணத்திலும் ஓவியங்களை வரைகிறேன்.

எனது ஓவியத்தில் கறுப்பு நிறம் தவிர்ந்த ஏனைய வர்ணங்களைப் பயன்படுத்துகிறேன். கறுப்பு என்ற வர்ணம் என்னைப் பொறுத்தவரையில் இல்லை. மனப்பதிவு வாதிகள் சூரியக் கதிரின் 7 நிறங்களைக் கைக்கொண்டார்கள். அதனையே நானும் பின்பற்றினேன். மனப்பதிவு வாதத்தின் பல பண்புகளைநான் உள்வாங்கியுள்ளேன். குறிப்பாக செசான், வன்கோ ஆகியோரின் தூரிகை வேலைப்பாட்டுப் பாணியை பின்பற்றினேன்.

மனப்பதிவு வாதிகள் தூரிகையைக் கையாண்ட முறையானது முன்னைய ஓவியமாக்கல் முறையிலிருந்து மாறுபட்டது. இவர்களது ஓவியங்கள் மனப்பதிவின் மேலாண்மையைச் சுட்டி நிற்கிறது. மனப்பதிவு வாதிகள் சமயம் சார்ந்த பிரபுக்கள் சம்பந்தமானவற்றை வரைதல் என்றல்லாமல் சாதாரண மக்களின்வாழ்க்கை பற்றி வரைந்தனர். இந்த அணுகுமுறை என்னைக் கவர்ந்தது.

**கலை வட்டம் - நுண் கலைத்துறை**
**யாழ்.பல்கலைக்கழகம் நடாத்தும்**
**- முதுசம் XI -**
**'கடந்த காலமும் கழிவிரக்கமும்'**
**கனகசபையின் ஓவியங்களின் தொகுப்பு கண்காட்சி பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது**

மனம் என்பது தூய்மையானது மனத்தில் (அகத்தில்) காணும் விடயம். இயற்கையில் உள்ளதைப் படைப்பில் அப்படியே வெளிப்படுத்தினால் அது படைப்பல்ல, அதை நான் எவ்வாறு உணர்கின்றேனோ, அதற்குத் தான் வடிவம் கொடுக்கிறேன்.


என்னைப் பொறுத்தவரையில் நானே எனது படைப்புகளின் சொந்தக்காரன். அச்சும், இல்லை உதவியாளனும் இல்லை.

சமூகத்தில் தற்போது கலைக்கான இடம் அருகிப்போய்க் கொண்டிருக்கிறது. கலை, கலையுணர்வுடன் அல்லாமல் கலைசாராத சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், அந்தஸ்து கௌரவம் என்பனவற்றுக்காகவுமே படைக்கப்படுகிறது.



மேலைத்தேயத்தவர்கள் படைப்பில் அதன் நயம், ஆளுமை, நுண்மைத்தன்மை என்பவற்றை கருத்திற் கொண்டு, படைப்பின் விலையை மதிப்பவர்களாக இருக்க, உள்ளூர் நுகர்வோர் உங்களின் நினைவாக உங்கள் படங்களைத் தருவீர்களா என்று கேட்கிறார்கள்.

போரில் எனது படைப்புகளில் 20 கைநழுவிவிட்டது. ஏனைய ஓவியங்களில் 21 யாழ். பல்கலைக்கழகத்திலும், 20 பொது நூலகத்திலும், 10 எனது சொந்தச் சேகரிப்பிலும் உள்ளன.



# புதுடெல்கி குண்டுவெடிப்புக்களுடன் தொடர்புடையவர்கள் கண்டுபிடிப்பு!

## இந்தியப் பிரதமர் தெரிவிப்பு



புதுடெ[illegible] ——

டெ[illegible]யில் நேற்றுமுன்தினம் அடுத்தடுத்து 3 இட[illegible]ளில் நடந்த பயங்கர குண்டுவெடிப்பில் 10[illegible] பேர் பலியானதுடன் 80 இற்கும் மேற்பட்டவர்[illegible]ள் காயமடைந்தனர்.

கு[illegible]வெடிப்பு நடந்த போது பிரதமர் மன்மோக[illegible], மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவிற்கு[illegible]ள் சுற்றுப்பயணமாக சென்றிருந்தார். [illegible]டுவெடித்த தகவல் அறிந்ததும் சுற்றுப் ப[illegible]ணத்தை ரத்துச்செய்துவிட்டு உடனடியாக அவர் டெல்கி திரும்பினார்.

டெல்கியில் பிரதமர் மன்மோகன்சிங்கை, உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், அமைச்சரவைச் செயலாளர் சதுர்வேதி, உள்துறை செயலாளர் வி.கே.துக்கால் ஆகியோர்



சந்தித்துப் பேசினர். அவர்கள் குண்டுவெடிப்பு குறித்து பிரதமரிடம் விளக்கிக் கூறினார்கள். தற்போதைய டெல்கி நிலவரம் குறித்து அனைவரிடமும் பிரதமர் கேட்டறிந்தார்.

பின்னர் பிரதமர் மன்மோகன்சிங் நிருபர்களிடம் கூறியதாவது -

டெல்கி குண்டுவெடிப்புடன் தொடர்புடையவர்களைக் கண்டுபிடித்துவிட்டோம். இது தொடர்பாக சில தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. இதைத்தவிர வேறு எதையும் தற்போதைய நிலையில் சொல்ல நான் விரும்பவில்லை.

எங்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குண்டு வைத்த இயக்கம் எது என்பதை விரைவில் கண்டுபிடிப்போம். ஸ்பெயின், இந்தோனேஷியா மற்றும் சில நாடுகளில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதுபோல், டெல்கி



யிலும் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்பது போன்ற யூகங்களுக்கு நான் பதில்சொல்ல விரும்பவில்லை.

அப்பாவி மக்கள் மீது நம்பிக்கையற்ற முறையிலும், முன்யோசனையற்ற வகையிலும் இந்தத் தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. இது இந்திய மக்களைக் குறிவைத்துத் தாக்கப்பட்ட கோழைத்தனமான நடவடிக்கை . இப்படிப்பட்ட சட்டவிரோதமான செயல்கள் வெற்றிபெற அரசு ஒருபோதும் அனுமதிக்காது.

அமைதியாக வாழும் மக்கள் மத்தியில் பயத்தையும், அவ நம்பிக்கையையும் ஏற்படுத்த தீவிரவாதிகள் இதுபோன்ற தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளனர். தீபாவளிப் பண்டிகையை ஒற்றுமையுடன் கொண்டாடுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் தான் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் நடைபெற்றுள்ளது.



இப்படிப்பட்ட துரோகச் செயல்களை நாம் தோற்கடிப்போம். அவர்கள் வெற்றிபெற அனுமதிக்கக்கூடாது. தீவிரவாதம் எந்த வடிவில் வந்தாலும் அதை எம்முடைய உறுதியான செயல்கள் மூலம் எதிர்ப்பது நமது கடமை. இதற்காகப் போராட வேண்டும். குண்டுவெடிப்பால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடி வெற்றி பெறுவதில் இந்திய மக்கள் ஒருபோதும் பின்வாங்கமாட்டார்கள். அவர்களுக்குத் திறமை, தகுதி உண்டு என்பதில் எனக்கு அதிக நம்பிக்கையுண்டு. தீவிரவாத செயல்களை முறியடித்து



சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கும் பணியில் அரசு ஈடு படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அமெரிக்க நிவாரண உதவியை கியூபா ஏற்றுக்கொண்டதா?

## மறுக்கிறார் பிடல் காஸ்ரோ

ஹவானா ——

வில்மா சூறாவளி பாதிப்புக் காரணமாக அமெரிக்க நிவாரண உதவியை முதல் முறையாக கம்யூ னிஸ்ட் நாடான கியூபா ஏற்றுக்கொண்டுள்ளது என்ற தகவலை கியூப அதிபர் பிடல் காஸ்ரோ மறுத்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக மெக்சிக்கோ வளைகுடா பகுதியை கத்ரீனா, ரீட்டா, வில்மா ஆகிய சூறாவளிகள் தாக்கி கடும் சேதத்தை ஏற்படுத்தின. இந்தச் சூறாவளிகளால் கியூபா நாட்டுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவும், கியூபாவும் பல ஆண்டு காலமாக பகைமை உணர்வுடன் இருந்து வருகின்றன. இரண்டு மாதங்களுக்கு முன் கத்ரீனா சூறாவளியால் அமெரிக்காவில் பாதிப்பு ஏற்பட்ட போது - ஆயிரம் டொக்டர்கள் மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்ப கியூபா முன்வந்தது. இதை ஏற்க அமெரிக்கா மறுத்துவிட்டது.

சில நாட்களுக்கு முன் வில்மா சூறாவளி கியூபாவையும், அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தையும் கடுமையாகத் தாக்கியுள்ளது. இதையடுத்து கியூபாவுக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்க அமெரிக்கா முன்வந்தது. இதை கம்யூனிஸ்ட் நாடான கியூபா ஏற்றுக்கொண்டதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அறிவித்தது. ஆனால், இதை கியூப ஜனாதிபதி பிடல் காஸ்ரோ மறுத்துள்ளார்.


கியூபா உதவியளிக்க வந்தபோது அமெரிக்கா மறுத்துவிட்டது. வில்மா சூறாவளி பாதிப்புக்குப்பின் மூன்று பேர் அடங்கிய ஆய்வுக் குழுவை அமெரிக்கா அனுப்புகிறது. சூறாவளி தாக்குதலுக்கு முன் ஏற்படுத்த வேண்டிய உள்நாட்டு கட்டமைப்புப் பணிகள் குறித்து ஆய்வு செய்ய இவர்கள் வருகின்றனர். அந்த மூன்று பேர் வர மட்டுமே கியூபா அனுமதியளித்தது. நிவாரண உதவிகளை நாங்கள் யாரிடமும் கேட்டுப் பெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




### போர் தொடங்குவதற்கு முன்னர்

# ஐக்கிய அரபு எமிரேட்டிற்கு செல்ல சதாம் சம்மதம் தெரிவித்தாராம்!

## வெளியாகும் புதிய தகவல்



டுபாய் ——

அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் போர் தொடுக்க முன்னர் ஈராக்கை விட்டு வெளி யேறி ஐக்கிய அரபு எமிரேட்செல்ல சதாம் சம்மதம் தெரிவித்திருந்தாரென தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து அல் - அராபியா தொலைக்காட்சி ஆவணப் பதிவொன்றை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது.

பேரழிவு ஆயுதங்களை ஈராக்கில் சதாம் மறைத்து வைத்திருப்பதாக அமெரிக்கா உட்பட பல நாடுகள் குற்றம் சாட்டின. இதற்காக அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் ஈராக்மீது போர் தொடுக்கத் தயாராகின. இந்தப் போர் கடந்த 2003 ஆம் ஆண்டு மார்ச்சில் தொடங்கியது.

இதற்கு சில வாரங்களுக்கு முன்னர் எகிப்தில் அரபு நாட்டு தலைவர்களின் அவசர கூட்டம் நடந்தது. இதில் அரபு தலைவர்கள் 22 பேர் [illegible]ந்து கொண்டனர். சதாமின் பிரதி[illegible]ளும் அதில் பங்கேற்றனர். அப்[illegible]து போரைத் தவிர்க்க, சதாம் ஐக்கிய அரபு எமிரேட்டுக்கு நாடு கடத்தப்படலாம் என்ற கருத்து - ஐக்கிய அரபு எமிரேட் ஜனாதிபதி ஷேக் சயீத் பின் சுல்தான் அல் நகாயனால் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து விரிவான ஆலோசனையும் நடந்தது. ஆனால், இந்தக் கருத்தை அரபு நாட்டுத் தலைவர்கள் பலரும் நிராகரித்தனர். சதாமின் பிரதிநிதிகளும் இந்தத் திட்டத்தை கீழ்த்தரமானது என்று வர்ணித்தனர்.

ஆனால், உண்மையில் - தான் நாடு கடத்தப்படுவதற்கு சதாம் சம்மதம் தெரிவித்திருந்தார். இந்த ரகசிய பேரம் அவரது பிரதிநிகளுக்குத் தெரியாது. சட்டரீதியாக தனக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை சதாம் விதித்திருந்தார்.

இது குறித்து ஐக்கிய அரபு எமிரேட்டின் ராணுவ துணைத் தளபதியும், அபுதாபியின் இளவரசருமான முகமது பின் கயீத் கூறுகையில் -

இந்தத் திட்டத்துக்கு உலகளவில் முக்கியத்துவம் பெற்றவர்களிடமும், சதாமிடமும் 24 மணி நேரத்தில் ஒப்புதல் வாங்கிவிட முடியும் என்ற நிலை இருந்தது. இதைத் தொடர்ந்தே அரபுத் தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் திட்டத்தைத் தெரி வித்தோம். இது குறித்து விரிவான ஆலோசனையும் நடந்தது என்றார்.

எகிப்து அதிபர் ஹொஸ்னி முபாரக் கூறு கையில் -

இந்தத் திட்டத்துக்கு அமெ ரிக்கா கூட ஒப்புதல் அளித்திருந்தது என்றார். எனினும் ஈராக் எதிர்க்கட்சி கள் இந்தத் திட்டத்துக்கு ஒப்புதல் தெரிவிக்கவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெங்களூர், சென்னை உட்படப் பல இடங்களில் தாக்குதல் நடத்துவதற்கு தீவிரவாதிகள் திட்டம்!

## எச்சரிக்கிறது இந்திய புலனாய்வுத்துறை

புதுடெல்கி ——

இந்திய தலைநகர் டெல்கியில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புக்களையடுத்து ஹைதராபாத், பெங்களூர், கொல்கத்தா மற்றும் சென்னை போன்ற நகரங்களும் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாமென இந்தியப் புலனாய்வுத்துறை எச்சரித்துள்ளது.

இதில் தீவிரவாதிகளின் தாக்குதல் பட்டியலில் பெங்களூர் நகரம் முதலிடத்தில் இருப்பதாகவும், அங்கு தகவல் தொடர்பு நிறுவனங்கள் வளர்ந்து வரும் நிலையில் அதைத் தடுக்கும் நோக்கத்தில் தீவிரவாதிகள் குறிவைத்திருப்பதாகவும் தகவல் வெளியானது.

இந்த நிலையில் பெங்களூரில் பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக கர்நாடக பொலிஸ் பொறுப்பதிகாரி அனைத்து மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் எச்சரிக்கை அழைப்பு விடுத்துள்ளார். பொலிஸார் விழிப்புடன் இருந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபடுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

பொதுமக்கள் இதனால் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றாலும், அஜாக்கிரதையாக இருக்க வேண்டாம். அனாதரவாகக் கிடக்கும் பைகளையோ, பொம்மை வடிவிலான பொருட்களையோ எவரும் தொட வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

பொருட்கள் வாங்கக் கடைக்குச் செல்லும் பெற்றோர் தங்கள் குழந்தைகளை எச்சரிக்கையுடன் பார்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சந்தேகப்படும் வகையில் ஏதாவது பொருட்கள் காணப்பட்டால் அது பற்றிப் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பெங்களூர் நகரில் பஸ் நிலையம், ரயில் நிலையம், முக்கிய வர்த்தக நிலையங்கள் என மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, டெல்கியில் வெடித்த குண்டுகள் அனைத்தும் சக்திவாய்ந்த ஆர்.டி.எக்ஸ் வகையைச் சேர்ந்தவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை பாகிஸ்தான் ஆதரவு இயக்கமான லஷ்கர் - இ - தொய்பா அமைப்பு பின்லேடன் தலைமையில் செயற்படும் அல் - கொய்பா அமைப்புடன் இணைந்து நடத்தியிருப்பது தெரியவந்துள்ளது.

ஏனெனில் காஷ்மீரில் தீவிரவாதிகள் குண்டுவைக்கும் விதத்தைவிட டெல்கியில் தீவிரவாதிகள் வைத்த குண்டு அதிக வித்தியாசத்துடன் இருந்தது.

இந்தக் குண்டுவெடிப்பு நடத்தப்பட்ட விதம், சக்தி ஆகியவை பின்லேடன் அமைப்பு நடத்தும் தாக்குதல் போல உள்ளது. எனவே, டெல்கி குண்டு வெடிப்பில் பின்லேடனுக்கு தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக பிடிபட்ட 22 பேரிடம் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# மறைந்த பாப்பரசரின் கார் ஏலம் விடப்பட்டது!

லாவேகாஷ் ——

மறைந்த பாப்பரசர் ஜோன்போல் முன்பு போர்ட் எஸ்கார்ட் காரைப் பயன்படுத்தி வந்தார். இந்த மொடல் கார் அமெரிக்காவின் லாவேஸ்காஷ் நகரிலுள்ள ஒரு ஏல விற்பனை நிலையத்தில் ஏலம் விடப்பட்டது.

இந்தக் காரை ஹுஸ்டனைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஜோன் ஒ குயின் என்பவர் ரூபா 7.5 கோடிக்கு ஏலம் எடுத்துள்ளார். இந்தக் கார் ரூபா 20 கோடிவரை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட் டது. ஆனால் 5 முறை ஏலம் விட்டும் 7.5 கோடிக்குமேல் அது ஏலம் போக வில்லை. இதை ஏலத்தில் எடுத்த கோடீஸ்வரர் ஒரு சட்டத்தரணி என்பது குறிப்பிடத்தக்கது.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வவுனியாவில் இன்று துக்கதினம்

வவுனியா —

வவுனியாவில் இன்று துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்கான அழைப்பை வவுனியா வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ளது.

புத்தூரில் இடம்பெற்ற சம்பவங்களைக் கண்டித்தும், வவுனியா தாண்டிக் குளத்தில் இடம்பெற்ற சம்பவங்களைக் கண்டித்துமே துக்கதினத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, வவுனியா மாவட்ட மக்கள் தமது இல்லங்களிலும், வியாபார நிறுவனங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு துக்கதினத்தை அனுஷ்டிக்குமாறு வெகுஜன அமைப்புக்கள் ஒன்றியம் கேட்டுள்ளது.

# புத்தூர்ப் பகுதி மக்கள் இன்று மகஜர் கையளிப்பு!

யாழ்ப்பாணம் —

புத்தூரிலுள்ள வீடொன்றுக்குள் கடந்த வியாழக்கிழமை இரவு நுழைந்த படையினர் - அங்கிருந்த பெண்கள் மீது பாலியல் பலாத்காரம் மேற்கொள்ள முயற்சித்த சம்பவத்தைக் கண்டித்து மறுநாள் படையினருக்கு எதிராக மக்கள் மேற்கொண்ட எதிர்ப்புப் போராட்டத்தின்போது படையினர் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி அப்பாவி இளைஞர் ஒருவர் உயிரிழந்த மற்றும் 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த சம்பவத்தைக் கண்டித்து அந்தப் பகுதி பொது மக்கள் இன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளனர்.

போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவினர் பிரசன்னமாகியிருந்த சந்தர்ப்பத்திலேயே படையினர் மக்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் எனவே இதற்கு கண்காணிப்புக்குழு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரியே இந்த மகஜர் கையளிக்கப்படவுள்ளது. இன்று காலை 10 மணியளவில் நல்லூர் முன்றலில் கூடி அங்கிருந்து கோவில் வீதியில் அமைந்துள்ள கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்குச் சென்று தமது மகஜரை கையளிக்கவுள்ளனர்.

# கேணல் ரிஸ்வி...

இதில் படுகாயமடைந்ததாலும், மதுபானம் அருந்தியிருந்ததாலும் உணர்வற்ற நிலையில் வாகனத்திலேயே ரிஸ்வி விழுந்து கிடந்தார்.

ரிஸ்வியின் நிலைமை குறித்து சுட்டுக்கொன்ற சிங்களவரே ரிஸ்வியின் வீட்டு தொலைபேசிமூலம் தகவல் தெரிவித்துள்ளார். அதன் பின்னர் உணர்வற்ற நிலையில் இருந்த ரிஸ்வி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவ இடத்தை ஆராய்ந்த பொலிஸார் ரிஸ்வியின் வாகனத்துக்குள் இருந்த நபரால் தான் இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருப்பதாகவும், வெளியில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான எதுவித வாய்ப்பும் இல்லை என்றும் உறுதியாக தெரிவித்தனர்.

ரிஸ்வியுடன் மிக நெருக்கமாக இருந்த சமில - திருகோணமலை சம்பூர் பகுதியைச் சேர்ந்தவர். இவருக்கும் புலனாய்வுத்துறை அதிகாரியான ரிஸ்விக்கும் இடையே மீன்பிடி வர்த்தகத்தின் லாப பங்கீடு தொடர்பாக மது போதையிலேயே வாக்குவாதம் நடந்துள்ளது. இது முற்றிய நிலையிலேயே அவர் ரிஸ்வியைச் சுட்டுக்கொன்றதாகக் கூறப்படுகிறது.

கொழும்பிலுள்ள பாதாள உலகக் குழுக்களுடன் சமிலவுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## மட்டக்களப்பில்...

காவலரண் கடமையிலிருந்த விடுதலைப் புலி போராளி மீது தாக்குதல் நடத்தினர். விடுதலைப் புலிகள் உடனடியாக பதில் தாக்குதல் நடத்தியதாகவும் தெரியவருகிறது.

கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்ட தமது உறுப்பினரையும் காயமடைந்த மேலும் மூவரையும் தூக்கிக்கொண்டு இராணுவப் புலனாய்வுத்துறையினருடன் தப்பிச்சென்றதாகவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

# புலனாய்வு அதிகாரி கேணல்...

அருகிலுள்ள கிரிபத்கொட பகுதியில் இந்தச் சம்பவம் இடமபெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கொழும்பிலிருந்து 8 கிலோமீற்றர் தொலைவில் - கண்டி வீதியில் களனிக்கும் கடவத்தைக்கும் இடையிலுள்ள கிரிபத்கொடவில் உதயமாவத்தையிலுள்ள தமது வீட்டிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு 9.45 மணியளவில் இரண்டு நண்பர்களுடன் கேணல் றிஸ்வி மீடின் காரில் சென்றிருந்தார். தனது நண்பர்களுடன் உணவு விடுதிக்குச் சென்றிருந்த இவர் சுடப்பட்டதாக அநாமதேய தொலைபேசி அழைப்பின் மூலம் அதிகாலை 12.30 மணியளவில் இவரது மனைவிக்கு தெரியப்படுத்தப்பட்டது.

உடனடியாக இது தொடர்பாக இவரது மனைவி இராணுவத் தலைமையகத்துக்கு அறிவித்தார். படையினரும் பொலிஸாரும் நடத்திய தேடுதலின்போது கிரிபத்கொடவில் உள்ள றிஸ்வி மீடினின் வீட்டிலிருந்து 600 மீற்றர் தொலைவில் ஒரு வீதியில் இவரது கார் நிற்பது கண்டுபிடிக்கப்பட்டது.

காருக்குள் சாரதியின் ஆசனத்தில் கேணல் றிஸ்வி மீடின் தலை மற்றும் கழுத்துப் பகுதிகளில் மைக்ரோ பிஸ்டலால் சுடப்பட்டு படுகாயமடைந்த நிலையில் - இரத்த வெள்ளத்தில் கிடந்தார்.

உடனடியாக இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சை செய்யப்பட்டபோதும் நேற்று அதிகாலை 1.45 மணியளவில் இவர் உயிரிழந்தார்.

இவரைக் காரில் அழைத்துச் சென்ற சிங்கள நண்பர்கள் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரும் இராணுவப் பொலிஸாரும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்தபின்னர் சுட்டுக்கொல்லப்பட்ட சிரேஷ்ட இராணுவ புலனாய்வு அதிகாரி இவரேயாவார். இராணுவப் புலனாய்வுத் துறை தலைமையக பிரதம அதிகாரியான இவர் கொழும்பு புலனாய்வுப் பிரிவு கட்டளை அதிகாரியாகவும் இருந்து வந்தார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இவர் நீண்டகாலம் கடமையாற்றியவர் எனவும் தெரியவருகிறது. அமெரிக்கா பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் ஹவாய்த் தீவிலும் விசேட புலனாய்வுத் துறை பயிற்சி பெற்ற இவர் அடுத்த வருடம் மே மாதம் கேணலாக பதவியுயர்வு பெற இருந்தவர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முதலாவது பட்டாலியன் கட்டளை அதிகாரியான லெப். கேணல் முத்தலிப் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் அவரது பொறுப்புக்களையும் இவரே செயற்படுத்திவருவதாகத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளுக்கெதிரான ஆயுதக் குழுக்களை கொழும்பிலிருந்து இயக்கிவந்த இவர் மின்னேரியா மற்றும் பொலநறுவ பகுதி இராணுவ முகாம்களுக்கு சென்று ஆலோசனைகளையும் வழங்கி வந்தவர் எனத் தெரியவருகிறது.

அண்மைக்காலத்தில் தமிழ் இளைஞர்கள் பலரைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்திய பின்னர் கொலை செய்து வீசிய சம்பவங்களுடன் இவர் தொடர்புபட்டிருந்ததாகவும் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்ட பொலிஸார் - கேணல் மீடினைச் சுட்டவர்கள் காரினுள் இருந்தே துப்பாக்கிப்பிரயோகம் செய்திருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகவும் - எனினும் உடனடியாக இதனைத் தெளிவாகக் கூறமுடியாது எனவும் தெரிவித்தனர்.

அத்துடன், இந்தக் கொலைக்கு யார் காரணம் என்பது குறித்து உடனடியாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். சுட்டுக்கொல்லப்பட்ட மீடினின் இறுதிச்சடங்குகள் நேற்று மாலை மாபொலவில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கொலை தொடர்பாக பொலிஸார் 4 பேரை கைதுசெய்திருப்பதாக தெரிவித்தபோதும் - அவர்கள் பற்றிய விபரங்கள் எதையும் வெளியிடவில்லை.

### எச்சரிக்கை சுவரொட்டியை அடுத்

# சோசலிச சமத்துவக் கட்சியி பிரசாரக் கூட்டம் இரத்தானது

யாழ்ப்பாணம் —

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெறவிருந்த சோசலிச சமத்துவக்கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டம் - எச்சரிக்கை சுவரொட்டி ஒன்று ஒட்டப்பட்டிருந்ததையடுத்து இடைநிறுத்தப்பட்டதாக அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கின்றது.

சோசலிச சமத்துவக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக்கூட்டம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக ஜனாதிபதித் தேர்தலை தாம் பகிஷ்கரிப்பதாகவும் எனவே, ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக்கூட்டங்களை யாழ். குடாநாட்டில் நடத்த வேண்டாம் என்றும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததையடுத்தும் - அநாமதேய தொலைபேசி அழைப்பு மேற்படி கட்சியினருக்கு வந்ததையடுத்தும் இந்தப் பிரசாரக் கூட்ட நிறுத்தப்பட்டதாகவும் தெரி கிறது.

இதேவேளை, மோட்ட ளில் வந்த இரண்டு நபர்க றவு சபை மண்டபத்தில் தே சாரக் கூட்டம் நடத்தக்கூடா எச்சரித்துள்ளதாகவும் தெ றது.

# கைக்குண்டு தாக்குதலில் சகோதரிகள் படுகாயம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - ஆரையம்பதியில் நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு சகோதரிகள் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பு- ஆரையம்பதியில் விசேட அதிரடிப்படையினரின் முகாமுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலிலேயே நவரட்ணம் புஸ்பமாலா (வயது 34), நவரட்ணம் ஜெசித்தா (வயது 16) ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## இராணுவத்துடன்...

எதிர்பார்க்க முடியாதென்று விடுதலைப் புலிகள் இந்த ஆணைக் குழுவை நிராகரித்திருந்தனர்.

அதேபோல் மட்டக்களப்பு - அம்பாறை தமிழ்மக்களும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளை புறக்கணித்திருந்தனர்.

இதனால் கௌசல்யன் கொலை தொடர்பாக இராணுவத் தரப்பு மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் கருத்துக்களை மட்டுமே ஆணைக்குழுவால் பெறமுடிந்தது.

இதன்காரணமாக எம்மால் இறுதியான எந்த ஒரு முடிவுக்கும் வரவில்லை என்று ஆணைக்குழு கூறியுள்ளது.

இருப்பினும் இருதரப்பினரும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கவேண்டும். இருதரப் பினரும் போர்நிறுத்த மீறல்களில் ஈடுபடுகின்றனர் என்ற பொதுவான பரிந்துரைகளையே இந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்க கூட்டங்களை பகிஷ்கரிக்க கோரி

கொழும்பு —

தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களின் யாழ். வருகையையும், அவர்களின் அடிவருடிகளின் பொதுக் கூட்டங்களையும் பகிஷ்கரிக்குமாறு தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் கோரியுள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

ஜனாதிபதித் தேர்தல் தென்னிலங்கையில் சூடுபிடித்துள்ள இவ்வேளையில் தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்கள் இங்கு வர முயற்சிக்கிறார்கள். இவர்களுக்கு ஆதரவு வழங்கும் அவர்களின் அடிவருடிகள தாயகத்தில் ஏற்பாடு செ பொதுக்கூட்டங்களையு ளாகிய நாம் பகிஷ்கரிப்

இனிமேலும் தெ ஆட்சியாளர்கள் தமிழ் ற்ற முடியாது என்ற உ அவர்களுக்குப் புரிய இந்த உண்மையை உ கொள்ளாமல் அவர்கள் வார்களானால் தக்க பதிலடி நாம் தயாராவோம் என அ கையில் மேலும் தெரிவிக்க ளது.

# ஜனாதிபதி சந்திரிகா பங்கேற் கடைசி உத்தியோகபூர்வ நிக

கொழும்பு —

கொழும்புக்கும் - கட்டுநாயக்கவுக்கும் இடையில் அமைக்கப்படவுள்ள அதிவேக ரயில் பாதைக்கான அடிக்கல் நாட்டு விழாவே - ஜனாதிபதி சந்திரிகா இறுதியாக கலந்துகொள்ளும் உத்தியோக பூர்வ நிகழ்வாக இருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

தனது பதவிக்காலத்தின் இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ள ஜனாதிபதி சந்திரிகா எதிர்வரும் நவ திகதி கொழும்பு கட்டுந வேக ரயில் பாதைக்கு அ டவுள்ளார்.

இதன் பின்னர் நவம்ப திகதி தேர்தல் நடைபெறவு யில் இதுவே ஜனாதிபதி வின் இறுதி உத்தியோகபூ வாக இருக்கக்கூடும் என்று கள் தெரிவிக்கின்றன.

### பொலிஸ் ஆணைக்குழுவின்

# பதவிக்காலத்தை நீடிக் ஜனாதிபதி சந்திரிகா மு

கொழும்பு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் 24 ஆம் திகதி முடிவடையவுள்ளதால், அடுத்த 3 வருடங்களுக்கு பதவிக்காலத்தை நீடித்து தற்போதுள்ள ஆணைக் குழு உறுப்பினர்களைத் தெ பதவியில் அமர்த்துவதற்கு ஜ சந்திரிகா தீர்மானித்துள்ளா

பொலிஸ் ஆணைக்குழு வர்களையே மீளவும் யில் அமர்த்துவதற்கு மானித்துள்ளதை பொலி விரும்பவில்லையென ஆணைக்குழு ஆரம்பிக்கப் முதல் பொலிஸாருக்கு ெ களை ஏற்படுத்தும் விதமாக றங்களை வழங்கியதே இதற்கு மெனவும் தெரிவிக்கப்படுகிற

## கோண்டாவில்...

இதனிடையே யாழ்ப்பாணம் அரசடி வீதிப் பகுதியிலுள்ள படையினரின் காவலரண் மீது நேற்று முன்தினம் இரவு கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டபோதும் அது வெடிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## குண்டுத்...

நிலையில் உயிரிழந்தனர். படுகாயமடைந்த குழந்தை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

## குடாநாட்டில்...

வாகனங்கள் தோறும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டும் சில பிரதான சந்திகளில் சோக கீதங்கள் ஒலிக்க விடப்பட்டும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

## புலனாய்வு...

நான் இராணுவ அதி உட்பட அமைச்சர்களின் படு தொடர்பில் விசாரணைகளை குற்றவாளிகளை இன் விசேட குழுவை அமைக் கேட்டபோது ஜே.வி.பியின் த சோமவன்ச அமரசிங்கவும், வீரவன்சவும் விடுதலைப் புலி உதவி செய்வதற்காகவே நா வாறு கூறுகிறேன் என்றன னால் அந்த யோசனை இ வில் கைவிடப்பட்டது என்றும் மேலும் தெரிவித்தார்.


# பணிநிலை வேண்டுகை

நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தில் கீழ்க்காணும் ப ...ாளருக்கான வெற்றிடங்கள் உள்ளன.

திறமையும், ஆர்வமும், தகைமையும் உடையோர் காலை மணிக்கு உரிய ஆவணங்களுடன் 02-11-2005 அன்று நே வரவும்.

**கணனி தட்டெழுத்தாளர்கள் - பக்க வடிவமைப்பாளர்கள்**

☆ தட்டெழுத்தாளர்கள் தமிழில் வேகமாகவும் பிழையின்றியும் தட் செய்யக் கூடியவர்களாக இருக்கவேண்டும்.

☆ பக்க வடிவமைப்பாளர்கள் Photo shop, Coreldraw, Page mak ஆகியவற்றில் அனுபவமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

நிர்வாகப் பணிப்பாளர்
நமது ஈழநாடு.


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்